THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

645

"வக்கீல்"

23 NOV 1951
MADRAS
645
4.57.

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

இந்த இதழில்

புதிய கிராம பஞ்சாயத்துச் சட்டம்

பலதாரத்தடை — விவாகரத்து விதிகள்

தேவதாசி சட்ட வழக்கு

ஷாப் சட்ட வழக்கு

கேள்வி — பதில்

சென்னை "பிரேத" சப்ளை மசோதா

வரிகள்

விலை நிர்ணயம்

விபரம் உள்ளே பார்க்கவும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

THE "VAKIL" ~ ஏப்ரல்-1951 ~ 4 அணா

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—
20, லக்ஷிமிபுரம் 2-வது தெரு,
மதுரை.

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்

பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—
காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

ஜாதகம்! ★ ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை.

ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விபரம்: 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 3. ஒரு தசாவிற்கு புக்திவாரியாக பலன் எழுத ரூ. 12.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—

தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர்: வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ

தெப்பக்குளம் P. O., திருச்சி.

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L., (ஆசிரியர்)

"வக்கீல்" சந்தா விபரம்

வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு மட்டில் } ரூ. 3—0—0

விசேஷ வருட சந்தா ரூ. 6—0—0
(12 இதழ்களுக்கும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்களுக்குமாக)

ஷெ வெளிநாடு ... ... ரூ. 10—0—0

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் மட்டில் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 "வக்கீல்" மாத இதழ்களும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்கள் என்ற புத்தகங்களும் அனுப்பப்படும் ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சாதாரணமாய் வி. பி. பி. கிடையாது.

2. சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 : கும்பகோணம்
(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

3. மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

4. சிலோன் நேயர்கள் வி. பி. பி. மூலம் அனுப்பும்படி எழுதி ரூ. 6—7—0 செலுத்தி விசேஷ வருட சந்தாதார்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

5. வெளிநாட்டிலிருந்து சந்தா தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்மூலம் அனுப்பலாம்.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 ஏப்ரல் 1951 இதழ் 4

பொருள் அடக்கம்

பக்கம்

குறிப்புகளும்-செய்திகளும்

சென்னை இந்து பலதாரத் தடைச் சட்டம் செல்லுமா? 2

"பிரேத" சப்ளை மசோதா 2

புதிய சட்டங்கள்

சுருக்கியும்—வரிசையாகவும் 3

புதிய கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் 5

சென்னை இந்து பலதாரத்தடை விவாக ரத்து விதிகள் (1951) 8

வழக்கும்-தீர்ப்பும்

* தேவதாசிச் சட்ட வழக்கு 12

* பொது காலி இடத்தில் கட்டிய கட்டடம் 13

* ஷாப் சட்ட வழக்கில் ஹைகோர்ட்டின் தீர்ப்பு 15

கேள்வி-பதில் 17

கண்ட்ரோல் - வரிகள் முதலியவை 19

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
187706
சென்னை-600 008

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 3 ஏப்ரல் 1951 இதழ் 4

குறிப்புகளும் - செய்திகளும்

சென்னை இந்து பலதாரத் தடைச்சட்டம் செல்லுமா?

மதுரை சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இந்து பலதாரத் தடைச சட்டத்தை மீறியதாக திரு. பழனிசாமி கவுண்டர் என்பவர் மீது நடக்கும் வழக்கை மேல் நடத்தாமல் ரத்து செய்யவேண்டுமென்று அவர் சென்னை ஹைகோர்ட்டுக்கு செய்திருந்த மனு 15-3-1951-ல் உயர் நீதிபதி கனம் பஞ்சாபகேசய்யர் அவர்கள் முன் விசாரணைக்கு வந்தது. சென்னை இந்து பலதாரத்தடைச்சட்டம் இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டத்தில் கண்ட ஒரு ஜீவாதார உரிமைக்கு முரணாக இருப்பதால் அது செல்லாதென வாதாடப்பட்டது. அதாவது மதம் அல்லது ஜாதி காரணமாக பிரஜைகளுக்குள் வித்தியாசம் பாராட்டும் எவ்வித சட்டத்தையும் இயற்ற சட்டசபைகளுக்கே அதிகாரமில்லை என்றும் அப்படி வித்தியாசம் பாராட்டும் பழைய சட்டங்களும் செல்லாதெனவும் குடியரசு அமைப்புச் சட்டத்தில் இருப்பதால், இந்துக்களை மட்டில் குற்றவாளிகளாக்கும் இச்சட்டம் 26-1-1950-ல் ரத்தாகி விட்டதென கட்சி சொல்லப்பட்டது. நீதிபதி அவர்களும் இது ஒரு முக்கிய பிரச்னைதான் என்றும், மதப்பற்றற்ற இந்திய அரசாங்கத்தில், இரண்டாவது மணம் செய்துகொள்ளும் இந்துவை மட்டில் தண்டித்து, இன்னும் மூன்று மணங்கள் செய்துகொள்ளும் முஸ்லீமை பாதிக்காமல் விட்டுவிடும் இச்சட்டம் குடியரசு அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 26-1-1950-க்குப் பின் செல்லுமா என்ற முக்கிய பிரச்னையை ஒரு நீதிபதி மட்டில் முடிவு செய்வதை விட பல உயர் நீதிபதிகள் கலந்து ஆலோசித்து முடிவு செய்வது நலமென்று நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு அதற்காக விசாரணை ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. இன்னும் சில தினங்களுக்குள் இது சம்பந்தமான சென்னை ஹைகோர்ட்டாரின் முடிவை நேயர்கள் எதிர்பார்க்கலாம்.

"பிரேத" சப்ளை மசோதா!

நாட்டில் ஏற்பட்டிருக்கும் உணவுப் பஞ்சத்தைப் போக்குவதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் நமது சர்க்காருக்கு—மக்களுடைய உடலை விட்டு உயிர் பிரிந்து போனாலும் கூட அவர்களுடைய பூத உடலைப்பற்றியக் கவலை இல்லாமல் இல்லை. மக்களுடைய சொத்து சுதந்தரங்களைப்பற்றி எப்படிச் சட்டம் கொண்டுவர நமது சர்க்காருக்கு உரிமை உண்டோ, அதே விதம் மக்களின் உடல்களைப்பற்றியும் ஏன் அவர்கள் சட்டம் இயற்றக்கூடாது? உயிர் போனபின் உடல் யாருடைய சொத்து? இந்தப் பிரச்னை எப்படி இருந்தாலும் சென்னை சர்க்கார் இப்பொழுது உயிரிழந்த உடல்களைப் பற்றி ஒரு மசோதா கொணடு வந்திருக்கின்றனர். மற்ற சரக்குகளுக்கும் பண்டங்களுக்கும், தேவை இருப்பது போல், பிரேதங்களுக்கும் "பெருத்ததேவை" ஏற்பட்டிருக்கிறதாம்! வைத்தியக்கல்லூரிகளில் அங்கசாஸ்திர ரீதியாக மனித உடல்களைப் பரிசிலனை செய்யவும் ஆராய்ச்சி செய்யவும் மனித உடல்கள் வேண்டுமாம்! அதற்காக ஆஸ்பத்திரிகளிலோ, சிறைச் சாலைகளிலோ, ரஸ்தா முதலிய பொது இடங்களிலோ உயிர்நீக்கும் மக்களுடைய உடல்களை "சமீபஉறவினர்" ஒருவரும் ஒருகுறிப்பிட்ட காலத்திற்குள் கேட்காவிட்டால், அநாதியற்ற பிரேதமாக பாவிக்கப்பட்டு சில வைத்தியக் கல்லூரிகளுக்கு உடனே அப்பிரேதங்களை அனுப்ப இம் மசோதாவில் சர்க்கார் அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பற்றுக்குறைப் பண்டங்களை நேர்த்தியாகப்பங்கீடு விநியோகம் செய்து வரும் நமது சர்க்கார், உணவு, சர்க்கரை, வெல்லம், ஜவுளி முதலியவற்றில் அடைந்த அனுபவத்தையும் வெற்றியை

யும் விலக்காமல், அவைகளை பிரேதங்கள் விஷயத்திலும் கையாள நிச்சயம் செய்திருக்கின்றனர் போலும்! மற்ற கண்ட்ரோல் சட்டங்களில் இருக்கும் ஷரத்துக்களைப்போலவே "குறித்த காலம்" என்றால் எவ்வளவு காலம் என்று சர்க்கார் விதிகள் செய்யலாம். "சமீப உறவினர்" என்றால்—மனைவி, கணவன் பெற்றோர், மகன், மகள், சகோதரன் அல்லது சகோதரி, மூன்று கால்களுக்குள்பட்ட நேர் வழி ரத்த உறவினர், ஆறு கால்களுக்குட்பட்ட கிளை வழி ரத்த உறவினர், அவர்களுடைய புருடன் மனைவி—என்று மசோதாவில் விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இவர்கள்தான் அப்பிரேதத்தைக் கேட்க உரிமை உள்ளவர்கள். இந்த உறவு பாத்தியத்தை ஆஸ்பத்திரி அல்லது சிறைச்சாலை அதிகாரி ஒப்புக்கொள்ளா விட்டால் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அதை நிர்ணயம் செய்வார். அவர் முடிவு செய்வதற்குள் பிரேதங்கள் அழுகாமலிருக்க சர்வ வல்லமை உள்ள நமது சர்க்கார் அதற்கும் விதிகள் ஏற்படுத்துவார்கள்!

விஞ்ஞான ரீதியில் எவ்வித ஆராய்ச்சிகள் செய்வதையும் ஒருவரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் அதற்கு இம்மசோதா வேண்டியதில்லை என்பதை பட்டில் தான் நமது மந்திரிமார்களுக்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் எடுத்துக் காட்டுகிறோம். குடியரசில் "சாதியற்ற" பிரேதம் எதய்யா? இந்நாட்டில் உயிர் நீக்கும் ஒவ்வொரு இந்தியனும ஏழையாக இறந்தாலும், வறுமையால் இறந்தாலும் ஆஸ்பத்திரியில் இறந்தாலும் நடுரஸ்தாவில் இறந்தாலும் அவனுடைய உடல் இந்நாட்டு மன்னன் ஒருவனுடைய உடல் அல்லவா? உறவில்லாத பிரேதங்கள் அவருடைய சிநேகிதர்களுடையது; இனத்தாருடையது; மதத்தினருடையது. ஒருவருமில்லாவிட்டாலும் இறந்த இந்தியனுடைய உடலை மரியாதையாக அடக்கம் செய்யும் பொறுப்பு நமது ஜனநாயக சர்க்காருடையது. பிரேதங்கள் வேண்டுமானால் நிர்ப்பந்தமில்லாமல் அதை அடைய வழி இல்லையா? உதாரணமாக இச்சட்டத்தின் அவசியத்தை ஆமோதிக்கும் எவரும் "தாம் இறந்த பிறகு தம்முடைய உடல் சர்க்காருக்கு ஆராய்ச்சிக்காக கொடுக்கப்பட வேண்டுமென்று" உயில் போன்ற உறுதி மொழிகள் மூலம் ஏற்பாடு செய்யலாம்! அதற்கு இச்சட்டம் இடங்கொடுத்தால் போதும்! அப்படிக்கில்லாமல் இம்மசோதா அப்படியே சட்டமானால் — ஏழைகள் ஆஸ்பத்திரிக்குப் போக அஞ்சுவார்கள்! ஆஸ்பத்திரியில் இறக்கும் பணக்காரர்களுடைய உடல்களைத் திரும்பி வாங்கும் விஷயமாய் பேரம் ஏற்படலாம்!

புதிய சட்டங்கள்

சுருக்கியும்-வரிசையாகவும்

1951-ம் வருஷத்திய (மத்திய) சட்டங்கள்.

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டவை. பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன]

1. கிரிமினல் வழக்கு முறைத் திருத்தச் சட்டம்-Code of Criminal Procedure-Amendment-Act I of 1951 (17-2-1951). ஏற்கனவே பிரிட்டிஷ் பாகாணங்களில் மட்டில் அமுலில் இருந்த இச்சட்டம் இப்பொழுது அகில இந்தியாவிலும்—அதாவது காஷ்மீர் தவிர பழைய சுதேச சமஸ்தானங்கள் அடங்கிய மற்ற எல்லா 'பி' ராஜ்யங்கள் உள்பட அமுலில் இருக்கும்படி திருத்தப் பட்டிருக்கிறது. இனி அகில இந்தியாவுக்கும் ஒரே கிரிமினல் வழக்கு முறைச் சட்டம். அச்சட்டத்தில் இன்னும் சில திருத்தங்களும் செய்யப் பட்டிருக்கின்றன.

2. சிவில் வழக்கு முறைத் திருத்தச் சட்டம்-Code of Civil Procedure-Amendment Act, 1951. (17-2-1951) அது போலவே சிவில் வழக்கு முறைச்சட்டமும் (காஷ்மீர், மணிபூர் சில ஷெட்யூல் இடங்கள் தவிர) அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும்படி திருத்தப் பட்டிருக்கிறது. இனி அகில இந்தியாவிலும் ஒரே சிவில் வழக்கு முறைச் சட்டம். அச்சட்டத்தில் இன்னும் சில திருத்தங்களும் செய்யப் பட்டிருக்கின்றன.

3. இந்திய சமஸ்தான ராஜ்யங்கள் சட்ட விஸ்தரிப்புச் சட்டம் - Part B States (Laws) Act 1951 (22-2 1951) ஏற்கனவே சுதேச சமஸ்தானங்களாக இருந்து இப்பொழுது இந்திய யூனியன் B ராஜ்யங்களாக இருக்கும் மைசூர், திருவாங்கூர்-கொச்சி, ஹைதராபாத் போன்ற எல்லா ராஜ்யங்களுக்கும் (காஷ்மீர் தவிர) பல இந்தியச்சட்டங்கள் அமுலுக்கு வரும். இந்தியன்பீனல் கோடு, ருசுச் சட்டம், ஒப்பந்தச்சட்டம், காலாவதிச் சட்டம், தொழிற்சாலைச் சட்டம் போன்ற எல்லா முக்கியச் சட்டங்களும் விஸ்தரிக்கப்படும். இனி அகில இந்தியாவிலும் பல முக்கிய சட்டங்கள் ஒன்றுகவே இருக்கும்.

4. தடுப்புக் காவல் திருத்தச் சட்டம் -Preventive Detention Amendment Act 1951 (22-2-1951) ஒருவர் குற்றங்கள் செய்யும் முன்பே அவரை அரெஸ்ட் செய்து காவலில் வைத்திருக்க சர்க்காருக்கு அதிகார மளிக்கும் தடுப்புக் காவல் சட்டம் 1950-ல் ஏற்பட்டது. 1-4-1951-ல் அமுல் இழந்து விடும்படி இருந்தால், இப்பொழுது இத்திருத்தச் சட்டத்தால் 1-4-1952 வரை தடுப்புக் காவல் சட்டம் நீடிக்கப் பட்டிருக்கிறது. இந்தியக் குடியரசின் பந்தோபஸ்தையோ, அமைதியையோ கெடுக்க எத்தனப் படுகின்றவர்களையும், பொது மக்களுக்கு அத்தியாவசியமான பண்டங்களைப் பதுக்கி அமிதலாபம் அடைய முயலுகின்றவர்களையும் அவர்கள் குற்றம் செய்வதற்கு முன்பே அவர்களை அரெஸ்ட் செய்து காவலில் வைக்க இச்சட்டத்தால் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. சர்க்கார் அவ்விதம் செய்வதில், அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்ட ஜீவாதாரஉரிமைகளுக்கு இணங்க இச்சட்டம் இருக்கும்படி ஆலோசனை சபை அமைத்தும் சில ஷரத்துக்கள் திருத்தியும் அமைக்கப் பட்டிருக்கின்றன. தடுப்புக் காவல் கைதிகளை தாற்காலிகமாக வெளியில் விட்டு வைக்கவும் சர்க்காருக்கு அதிகாரமளிக்கப் பட்டிருக்கிறது.

5. வேலையில் அமர்த்திக் கொள்பவர் பொறுப்புச் சட்டத் திருத்தம் - The Employer's Liability Amendment Act 1951. (28-2-1951) முதலாளி அல்லது அவருடைய ஏஜண்டுகளின் அஜாக்கிரதையாலோ அசட்டையாலோ, அவர்கள் மெஷின் முதலியவற்றைச் சரிவர வைத்துக் கொள்ளாத காரணத்தினலோ வேறு சில காரணங்களினலோ ஒரு தொழிலாளர் அல்லது சிப்பந்திக்கு ஏற்படக்கூடிய காயம் முதலிய சரீர சம்பந்தமான துன்பங்களுக்கு, அவர் முதலாளி மீது தமக்கு நஷ்ட ஈடு கிடைக்க, கோர்ட்டில் தாவா செய்தால், முதலாளி சில கட்சிகள் சொல்லக்கூடாதென்பதைப்பற்றி இருக்கும் 1938-ஆம் வருடத்திய 24 ஆவது (மத்திய) சட்டம் திருத்தப் பட்டிருக்கிறது. இத்திருத்தச் சட்டப்படி முதலாளியும் தொழிலாளரும் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களில், முதலாளியின் இது சம்பந்தமான பொறுப்பை நீக்கியோ குறைத்தோ செய்து கொள்ளும் ஷரத்துக்கள் செல்லா என அச்சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

6. ரயில்வேச் செலவு அனுமதிச் சட்டம் -The Appropriation Railways Act 1951 (1-3-1951) இந்திய ரயில்வேக்களின் செலவுக்காக 31-3-1951 உடன் முடியும் ஒரு வருடத்தில், இந்தியப் பொது நிதியிலிருந்து இன்னும் இருபத்து நாங்கு கோடியே, பதினறு லக்ஷத்து ஐம்பத்தேழாயிரம் ரூபாய் செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

7. அரசாங்கப் பொதுச் செலவு அனுமதிச் சட்டம் - The Appropriation Act 1951 (1-3-1951) இந்திய அரசாங்கத்தின் பொதுச் செலவுகளுக்காக 31-3-1951 உடன் முடியும் வருடத்தில், இந்தியப் பொது நிதியிலிருந்து இன்னும் முப்பத்து மூன்று கோடியே, பதினெட்டு லக்ஷத்து ஐயாயிரம் ரூபாய் செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

ஸ்தாபிதம் 1942

தந்தி "லலிதாலய"

உயர்தர ஆயுர்வேத சிகித்ஸைக்கும் மருந்துக்கும்

லலிதா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை

கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ்
49, மூர்த்தி செட்டித் தெரு.

பிராஞ்சு
73, பக்தபுரி அக்ரஹாரம்.

விசேஷ தயாரிப்பு
நரம்பு தளர்ச்சிக்கு "யௌவநீ"

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"
1 மண்டலம் (48 நாள்)
பூஜை செய்தும்

ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை
ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். டி தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N.B. (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

கோட்டமருதூர்,
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,
அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)

புதிய கிராமப் பஞ்சாயத்துச் சட்டம்.

1-4-1951 முதல் அமுல். பழைய கிராமப் பஞ்சாயத்துப் போர்டுகளே புதிய சட்டப் படிக்கான பஞ்சாயத்துக்களாக மாறுவது பற்றிய விதிகள். இனி பஞ்சாயத்துக் கோர்ட்டுகளும் அவைகளே. பஞ்சாயத்து மெம்பர்களின் பதவிகாலம் 1-7-1951 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கிராமப் பஞ்சாயத்துக்கள் சென்னை ஸ்தல ஸ்தாபனச் சட்டப்படி (Madras Local Boards Act, 1920) அமைக்கப்பட்டு அச்சட்டத்தில் கண்ட அதிகாரங்களைச் செலுத்தி வேலை செய்து வந்தன. ஆனால் கிராமப் பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்டவரை அச்சட்டம் ரத்து செய்யப்பட்டு, சென்ற வருடம் ஒரு புதிய கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இதுதான் 1950-ஆம் வருடத்திய 10-ஆவது (சென்னை) சட்டமாகிய சென்னை — கிராமப் பஞ்சாயத்துச் சட்டம். (Madras Village Panchayats Act, 1950.) ("வக்கீல்" 1950 செப்டம்பர் இதழில் இச் சட்டம் விளக்கப்பட்டிருக்கின்றது.) இச்சட்டம் சென்னைச் சட்ட சபைகளால் நிறைவேற்றப் பட்டு, 15-7-1950-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1-8-1950-ல் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. சட்டம் 'பாசானாலும்' அது அமுலுக்கு வரும் தேதியைக் குறிப்பிட சர்க்காருக்கே இச்சட்டத்தால் அதிகாரம் அளிக்கப் பட்டிருந்ததால், அந்த அதிகாரத்தை உபயோகித்து, சென்னை சர்க்காரும் 5-12-1950 தேதியுள்ள G. O. No. 2330 மூலம் இச்சட்டம் 1-4-1951 முதல் அமுலுக்கு வருமென்று உத்தரவிட்டிருக்கின்றனர்.

இவ்விதம் புதிய பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன் பழைய சட்டப்படி அமைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துக்கள் எவ்விதம் இப்புதுச் சட்டப்படி அமைக்கப் பட்டுள்ள பஞ்சாயத்துக்களாக மாறும் என்பதைப்பற்றிச் சில விதிகள் இருக்கின்றன. இவை புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 131-லும் ஷெட்யூல் 3-லும் இருக்கின்றன. இவ்விதிகள் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியவைகளாதலால், முதலில் இவ்விதிகளைக் கவனிப்போம்.

(1) பழைய சட்டப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் பஞ்சாயத்துக் கிராமங்கள் இப்புதிய சட்டப்படி அதே இடங்களுக்கு 1-4-1951-ல் அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக் கிராமங்களாகப் பாவிக்கப்படும். ஆனால் ஜனத்தொகை 500-க்கு மேற்பட்ட பல ரெவின்யூ கிராமங்கள் சேர்ந்து ஒரே பஞ்சாயத்தாக இருந்தால் இவைகளை ஒவ்வொன்றிலும் ஜனத்தொகை 500-க்குக் குறையாத தனித்தனிப் பஞ்சாயத்துக்களாக லோகல் போர்ட் இன்ஸ்பெக்டர் கூடிய சீக்கிரமாக அமைக்கவேண்டும். (ஷெட்யூல் 3-விதி 2)

(2) புதிய சட்டப்படி ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திற்கும் எத்தனை அங்கத்தினர்கள் (Members) இருக்கவேண்டுமென்று லோகல் போர்டு இன்ஸ்பெக்டர்தான் நிர்ணயிக்க வேண்டும். புதிய சட்டப்படி எந்தப் பஞ்சாயத்துக்கும் 5-க்குக் குறைந்த அங்கத்தினர்களோ 15-க்கு மேற்பட்ட அங்கத்தினர்களோ கிடையாது. 1-4-1951-க்கு முன், பழைய சட்டப்படி ஒரு பஞ்சாயத்துக்கு எத்தனை அங்கத்தினர்கள் உண்டென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதோ, அதே எண்ணிக்கையை அப்பஞ்சாயத்துக்கு இப்புதிய சட்டப்படி நிர்ணயம் செய்யப்பட்டதாகப் பாவிக்கப்படும். ஆனால் எந்தப் பழைய பஞ்சாயத்துக்காவது 15க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் இருந்தால், இப்புதுச் சட்டப்படி அந்தப் பஞ்சாயத்திற்குத் தேர்ந்தெடுக்க வேண்டிய அங்கத்தினர்கள் 15-என்று வைத்துக்கொள்ள வேண்டும்.

(விதி 3)

(3) 1-4-51-ல் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் பழைய சட்டப்படிக்குள்ள அதன் தலைவர், (President); அதில் கிராமப் பெரிய தனக்காரர் (Village Headman) அங்கத்தினராக இருந்தால் அவர் இவ்விருவர்களும் நீங்கலாக மற்ற எல்லாப் பழைய அங்கத்தினர்களும் இப் புதுப் பஞ்சாயத்துச் சட்டப்படி அப்பஞ்சாயத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களாகப் பாவிக்கப் படுவார்கள். இவர்கள் எவ்வளவு காலம் வரை அங்கத்தினர்களாக இருக்கலாம் என்று நிர்ணயம் செய்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. அப்படி சர்க்காரால் யாதொரு கெடுவும் குறிப்பிடப்படாவிட்டால், பழைய சட்டப்படி எந்தத் தேதி வரையில் அந்தந்த அங்கத்தினர்கள் பதவி வகித்து வரக்கூடுமோ அதுவரையில்தான் இவர்கள் புதிய பஞ்சாயத்தின் அங்கத்தினர்களாக இருக்க முடியும். [விதி 4 (1).]

[குறிப்பு: சென்னை ராஜ்யம் பூராவிலும் பழைய பஞ்சாயத்து போர்டு மெம்பர்களின் பதவிகாலம் 1-4-1951 உடன் முடிவடைவதாக இருந்ததை, இப்பொழுது சர்க்கார் மூன்று மாதங்கள் நீடித்திருக்கின்றனர். அதாவது பழைய பஞ்சாயத்துக்கள் இச்சட்டப்படிக்கான புதிய பஞ்சாயத்துக்களாக மாறி 1-7-1951 வரை வேலை செய்யும்.]

(4) பழைய பஞ்சாயத்தின் தலைவரே 1—4—1951-ல் புதிய பஞ்சாயத்துச் சட்டப்படி ஓட்டர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்பஞ்சாயத்தின் தலைவராகப் (President) பாவிக்கப்படுவார். தலைவர் என்ற உத்தியோக முறைமையில் அவர் அப் பஞ்சாயத்தின் ஓர் அங்கத்தினராகவும் (Ex-Officio Member) கருதப்படுவார். ஆனால் பழைய சட்டப்படி இவர் எவ்வளவு காலம் அங்கத்தினராக இருந்திருக்க முடியுமோ அது வரையில் தான் தலைவராகவும், அந்த முறையில் அங்கத்தினராகவும் இருப்பார். [விதி 4 (2)-7.]

(5) 1-4-1951-ல் பழைய பஞ்சாயத்தின் அங்கத்தினராக இருக்கும் கிராமப் பெரிய தனக்காரர்கள் பட்டில் (Village Headman) பதவியை இழப்பார்கள். புதிய பஞ்சாயத்துச் சட்டப்படி அவர்கள் கிராமப் பஞ்சாயத்தின் அங்கத்தினர்களாக இருக்கமுடியாது. [விதி 4 (3).]

(6) ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பழைய சட்டப்படி ஷெடியூலில் கண்ட ஜாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு எவ்வளவு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அதே ஸ்தானங்கள் 1-4-1951 முதல் அவர்களுக்குப் புதிய சட்டப்படி அப்பஞ்சாயத்துக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களாகப் பாவிக்கப்படும். [விதி 5 (1).]

(7) பழைய சட்டத்தின்படி வேறு எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு பஞ்சாயத்தில் ஏதாவது ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருந்தால் அந்த ஏற்பாடு 1-4-1951-ல் ரத்தாகிவிடும். பஞ்சாயத்துச் சட்டத்தில் ஷெடியூல் வகுப்பினரைத் தவிர மற்ற எந்த ஜாதியினருக்கும் தனித்தொகுதியோ ஸ்தானமோ ஒதுக்கப்பட மாட்டாது. ஆனால் இவ்விதத் தனி தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பழைய பஞ்சாயத்து அங்கத்தினர்கள் பட்டில் முன் சொன்னபடி புதிய பஞ்சாயத்தின் அங்கத்தினர்களாகப் பாவிக்கப்படுவார்கள். [விதி 5(2).]

(8) பழைய சட்டப்படி ஒரு பஞ்சாயத்துக் கிராமம் எவ்வளவு தேர்தல் வார்டுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதோ அவைகளே புதிய சட்டப்படி ஏற்படுத்தப் பட்டவையாக பாவிக்கப்படும். ஆனால் அது புதிய சட்டத்தின் ஷரத்துக்களுக்கு மாறாக இருந்தாலும், ஒரு பஞ்சாயத்தில் வார்டுகளே பிரிபடாமல் இருந்தாலும் அவைகளை லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் இச் சட்டப்படி திருத்தி அமைக்கவேண்டும். பழைய அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் எந்த எந்த வார்டின் பிரதிநிதியாகப் பாவிக்கப்பட வேண்டுமென்றும் இன்ஸ்பெக்டரே நிச்சயம் செய்ய வேண்டும். [விதி 6]

(9) 1-4-1951-க்கு முன்பு ஒரு பஞ்சாயத்துக்கு யார் தலைவராகவும் (President) யார் உப தலைவராகவும் (Vice - President) இருந்தார்களோ, அவர்களே புதிய பஞ்சாயத்துக்கும் தலைவராகவும், உப தலைவராகவும் ஆவார்கள். [விதி 7]

(10) 1-4-1951-ல் ஒரு பஞ்சாயத்தின் தலைவர் ஸ்தானமாவது உபதலைவர் ஸ்தானமாவது காலியாக இருந்தாலும், பிறகு காலியானாலும், இந்த ஸ்தாபனங்களுக்குப் புதிய பஞ்சாயத்துச் சட்ட ஷரத்துகளின்படியே தலைவரும், உபதலைவரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதாவது, தலைவரை, அப் பஞ்சாயத்தின் வாக்காளர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்; உபதலைவரை பஞ்சாயத்து அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். [விதி 8]

(11) 1-4-1951-க்குப் பின் ஒரு பஞ்சாயத்தில் எந்த அங்கத்தினரின் ஸ்தானம் காலியானாலும், அந்த ஸ்தானத்திற்கு இப்புதுச் சட்டப்படிக்குத்தான் தேர்தல் நடத்தி அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

[விதி 8 (2).]

(12) பழைய சட்டப்படி பஞ்சாயத்து அங்கத்தினராகவும் தலைவராகவும் இருந்து, புதுச் சட்டப்படி தலைவரானவரின் அங்கத்தினர் ஸ்தானமும், பதவி இழந்த கிராமப் பெரிய தனக்காரரின் அங்கத்தினர் ஸ்தானமும், 1-4-1951-ல் பழைய சட்டப்படிக்குக் காலியாக இருந்த மற்ற ஸ்தானங்களும் புதிய சட்டப்படி காலியான ஸ்தானங்களாகவே பாவிக்கப்படும். (விதி 8. விவரணம்) புதிய சட்டப்படி அவைகளுக்குத் தேர்தல் நடத்தப்படும்.

(13) பழைய சட்டப்படி கலைக்கப்பட்டோ, ரத்து செய்யப்பட்டோ (Panchayat dissolved or superseded) மறுபடியும் அமைக்கப்பட வேண்டியதாக 1-4-1951ல் இருக்கும் பஞ்சாயத்துக்கள் புதிய சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து திருத்தி அமைக்கப்பட வேண்டும். [விதி 9]

(14) பழைய பஞ்சாயத்துக்களின் சொத்துக்கள் அந்தந்தப் புதிய பஞ்சாயத்துக்களுடைய வையாகும். பழைய பஞ்சாயத்துக்குச் சேர வேண்டிய வரி முதலியவைகள் புதிய பஞ்சாயத்தையே சேரும். நடவடிக்கைகள் முதலியவற்றைப் புதிய பஞ்சாயத்தே தொடர்ந்து நடத்தும். பழைய வரிகளே தொடர்ந்து வசூல் செய்யப்படும். பழைய சட்டப்படி எடுக்கப்பட்டுள்ள எல்லா நடவடிக்கைகளும் கூடுமான வரை புதிய சட்ட ஷரத்துக்களின்படி எடுத்துக் கொண்டவையாகவே பாவிக்கப்பட்டு நடத்தப்படும். [விதிகள் 11, 12, 13.]

புதிய பஞ்சாயத்துக்கள்தான் இனி பஞ்சாயத்துக் கோர்ட்டுகளும் ஆகும்.

கிராமக்கோர்ட் சட்டப்படி (Madras Village courts Act—1888) அமைக்கப்பட்டுள்ள பழைய பஞ்சாயத்துக் கோர்ட்டுகளும் கிராமக் கோர்ட்டுகளும் 1-4-1951ல் அதிகாரங்களை இழப்பார்கள்; அவைகளுக்குப் பதிலாக, புதிய பஞ்சாயத்துச் சட்டப்படி மேற்கண்ட விதம் அமைக்கப்பட்டுள்ள கிராம பஞ்சாயத்துக்களே அந்தந்தக் கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளாகவும் இருந்து சிவில் கிரிமினல் வழக்குகளை விசாரிக்க அதிகாரமுள்ளவையாகும்.

1—4—1951 முதல் ரூபாய் 100 வரை உள்ள வழக்குகளை பஞ்சாயத்துக் கோர்ட்டுகளே விசாரிக்கலாம். கிராம கோர்ட் சட்டம் செக்ஷன் 13ன்படி ரூ. 50க்குட்பட்ட வழக்குகளைத்தான் விசாரிக்க கிராம கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருந்தது. இது இப்புது பஞ்சாயத்து சட்டத்தால் ரூ. 100 என்று திருத்தப் பட்டிருக்கிறது. 1—4—1951 முதல் ரூ. 100 வரை உள்ள வழக்குகளை கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டுகளே விசாரிக்கலாம். [செக்ஷன் 132 (4) d.]

புதிய பஞ்சாயத்துச் சட்டப்படிக்குக் கிராம பஞ்சாயத்துக்களுக்கு ஏராளமான பொறுப்பும் அதிகாரங்களும் இருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தின் சில முக்கிய அம்சங்கள் "வக்கீல்" 1950 செப்டம்பர் மாத இதழில் பெரும்படியாகச் சொல்லப் பட்டிருந்தாலும், அடுத்து வரும் "வக்கீல்" இதழ்கள் முதலாக இம் முக்கிய சட்டத்தின் எல்லா அம்சங்களும் விவரமாகவும் தொடர்ச்சியாகவும் விளக்கம் செய்யப்படும்.

சென்னை இந்து பலதாரத் தடை— விவாக ரத்து விதிகள் (1951)

சென்னை இந்து பலதாரத்தடை, விவாக ரத்துச் சட்டம் (Madras Hindu Bigamy Prevention and Divorce Act, 1949) 29—3—1949ல் அமுலுக்கு வந்தது. இச் சட்டத்தின் 6ஆவது செக்ஷனில், இச் சட்டத்தைச் சரிவர அமுல் நடத்துவதற்கான விதிகளை ஏற்படுத்த, சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தை அனுசரித்து, சென்னை சர்க்கார் 20-2-1951ல் கீழ்க்கண்ட விதிகளை ஏற்படுத்தி இருக்கின்றனர். இவ்விதிகளை விளக்கம் செய்வதற்காக மட்டில் சட்டத்தின் அவை சம்பந்தமான ஷரத்துக் களையும் குறிப்பிட்டிருக்கிறோம்.

விவாக ரத்து மனு:—இச்சட்டத்தின் 5-ஆவது செக்ஷன் விவாக ரத்து செய்து கொள்வதைப் பற்றியது. யார் விவாக ரத்து செய்துகொள்ள மனுப்போடலாம், எந்தக் கோர்ட்டில் மனு தாகல் செய்யப்படவேண்டும், எந்த எந்தக் காரணங்கள் இருந்தால் மட்டில் மனுப்போடலாம் என்ற விவரங்கள் இருக்கின்றன. சுருக்கமாக அவை பின்வருமாறு:— 18 வயது பூர்த்தியான கணவனே, மனைவியோ விவாகரத்து மனுச்செய்து கொள்ளலாம். எந்த இடத்தில் திருமணம் நடந்ததோ, அல்லது மனுவில் எதிர்க் கட்சிக்காரரான கணவனே, மனைவியோ எந்த ஊரில் (மனுப்போடும் காலத்தில்) வசித்து வருகிறாரோ, அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள சப்கோர்ட்டிலோ, ஜில்லா கோர்ட்டிலோ, சிட்டி சிவில் கோர்ட்டிலோதான் விவாகரத்து மனுப்போட வேண்டும். மனுவுக்கு கோர்ட்பீசு ஸ்டாம்பு ரூ. 10. மேலும் கீழ்க்கண்ட 10 காரணங்களுக்குள் ஏதாவது ஒரு காரணமாவது இருந்தால் தான் விவாகரத்து மனுச்செய்து கொள்ள முடியும். அவையாவன:—

1. கணவன் வேறு ஒரு ஸ்திரீயை வைப்பாக வைத்திருந்தால் — மனைவி விவாக ரத்துக் கேட்கலாம்.

2. அதேபோல் மனைவி வேறு ஒருவனுக்கு வைப்பாக இருந்தாலும், விபசார வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தாலும்—கணவன் விவாக ரத்துக் கேட்கலாம்.

3. மனுப்போடும் கணவனையோ, மனைவியையோ, விட்டு விட்டு (deserted) அவ்விருவருள் ஒருவர் யாதொரு நியாயமான காரணமுமின்றி, மனுத்தேதிக்கு முன்புள்ள தொடர்ந்த மூன்று வருடங்களுக்குக் குறையாத காலத்திற்கு வேறாகப் போயிருந்தாலும் விவாக ரத்து மனுச்செய்து கொள்ளலாம்.

4. தம்பதிகளில் ஒருவரின் குரூர நடத்தையால் (cruelty) மற்றவர் அவருடன் வசிப்பது அபாயமாக இருந்தால்-மற்றவர் விவாக ரத்துக் கேட்கலாம்.

5. மனுத்தேதிக்கு முன்புள்ள தொடர்ந்த 5 வருட காலத்திற்குக் குறையாமல், தம்பதிகளில் எவருக்காவது வைத்தியத்தால் குணப்படுத்த முடியாத பைத்தியம் பிடித்திருந்தால் - மற்றவர் விவாகரத்து மனுச்செய்யலாம்.

6. மனுத்தேதிக்கு முன்புள்ள தொடர்ந்த 5 வருட காலத்திற்குக் குறையாமல், தம்பதிகளில் எவராவது, வைத்தியத்தால் குணப்படுத்த முடியாத, மிகக் கடுமையான குஷ்ட ரோகத்தால் (Virulent and incurable form of leprosy) பீடிக்கப்பட்டிருந்தால் - மற்றவர் விவாகரத்துக்கு மனுப்போடலாம். ஆனல் இந்த வியாதி மனுதாரிடமிருந்தே பரவினதாக இருக்கக்கூடாது. அவ்விதமிருந்தால் மனுச் செய்யப் பாத்தியமில்லை.

7. மனுத்தேதிக்கு முன்புள்ள தொடர்ந்த 5 வருட காலத்திற்குக் குறையாமல், தம்பதிகளில் எவராவது, பிறருக்குப் பரவக்கூடிய மேக வியாதியால் (Venereal disease in a communicable form) - பீடிக்கப்பட்டிருந்தால் - மற்றவர் விவாகரத்துக்கு மனுப் போடலாம். ஆனல் இந்த வியாதியும் மனுதாரிட

மிருந்தே பரவினதாக இருக்கக்கூடாது. அவ்விதமிருந்தால் மனுச் செய்யப் பாத்தியமில்லை.

8. திருமணம் ஏற்பட்ட காலத்திலும், அது முதல் மனுத் தேதிவரையிலும், தொடர்ச்சியாய்க் கணவனுக்கு புருடத்தன்மை இல்லாமலிருந்தால் (impotent)- மனைவி விவாகரத்துச் செய்துகொள்ள மனுப்போடலாம்.

9. தம்பதிகளில் ஒருவர் இந்து மதத்தை விட்டு வேறு மதத்தைத் தழுவினல் - மற்றவர் விவாகரத்துச் செய்து கொள்ள மனுப் போடலாம்.

10. இச்சட்டத்தேதிக்கு (29—3—1949) முன்பே, ஒரு மனைவி இருக்கும் போது கணவன் மறுபடி வேறு மனைவியையும் மணம் செய்துகொண்டு, அவள் மனுத் தேதியில் உயிருடன் இருந்தால் - முதல் மனைவி விவாகரத்துச் செய்துகொள்ள மனுப்போடலாம். ஆனல் 18 வயது பூர்த்தியான பிறகுதான் முதல் மனைவி விவாகரத்து மனுப்போடலாம்.

இவ்விதம் கோர்ட்டுகளில் தாகல் செய்யக் கூடிய விவாகரத்து மனுக்கள் எவ்விதம் இருக்க வேண்டுமென்றும், எவ்விதம் விசாரிக்கப்பட வேண்டுமென்றும், அப்பீல், காலாவதி முதலியவை சம்பந்தமாயும், இப்பொழுது சர்க்காரால் கீழ்க்கண்ட விதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவற்றின் விவரம்:—

விவாகரத்து மனுவில் சொல்லவேண்டிய விவரங்கள்:—1. சிவில் கோர்ட்டில் போடும் பிராதுகளில் எந்த எந்த விவரங்கள் இருக்கவேண்டுமென்று சிவில் வழக்கு முறைச் சட்டத்தில் (Civil Procedure Code) குறிப்பிடப்பட்டிருக்கின்றனவோ, அவ்விவரங்கள் எல்லாம் "விவாகரத்து" மனுக்களிலும் இருக்கவேண்டும். அதாவது, கோர்ட், மனுதார் எதிர் மனுதார்களின் பெயர், விவரம், விலாசம், மைனர் அல்லது புத்தி சுவாதீனமில்லாமலிருந்தால் அது விபரம், வியாஜ்ய மூலம், அந்தக் கோர்ட்டில் கொடுக்கப்படுவதற்கான காரணம், மனுவில் கேட்கும் பரிகாரம் முதலியவை சொல்லப்படவேண்டும்.

2. திருமணம் நடந்த இடம், தேதி.

3. மனைவியின் பெயர், அந்தஸ்து, விவாகத்திற்கு முன் அவள் சென்னை ராஜ்ய வாசியா, வேறு ராஜ்ய வாசியா (domicile whether in the State of Madras or elsewhere - of the wife before marriage) என்பது.

4. கணவனுடைய பெயர், தொழில், அந்தஸ்து, திருமண காலத்தில் சென்னை ராஜ்ய வாசியா, வேறு ராஜ்ய வாசியா - என்பது.

5. தம்பதிகள் கடைசியாகச் சேர்ந்து நிரந்தரமாக் வசித்த இடம்.

6. தம்பதிகளுக்கு மனுக்காலத்தில் உயிருடனிருக்கும் குழந்தைகளின் பெயர், பிறந்த தேதி, வயது இவைகள் விபரம்.

7. கணவன் போடும் மனுவில் - மனைவி வேறு ஒருவருக்கு வைப்பாக இருப்பதாகக் காரணம் காட்டி விவாகரத்துக் கேட்டால்— அந்த வேறு ஒருவரின் பெயர், தொழில், விலாசம் இவைகள் தெரிந்தவரையில் குறிக்கப் படவேண்டும்.

8. மனைவிபோடும் மனுவில் - கணவன் வேறு ஒரு ஸ்திரீயை வைப்பாக வைத்துக் கொண்டிருக்கிறார் என்ருவது, இச்சட்டத்திற்கு முன்பே மறுபடியும் ஒரு ஸ்திரீயை மணம் செய்து கொண்டிருக்கிறார் என்ருவது காரணம் காட்டி அவள் விவாகரத்துக்கேட்டால் - அந்த ஸ்திரீயின் பெயர், தொழில், விலாசம் இவைகளை மனுதாருக்குத் தெரிந்த வரையில் குறிப்பிடப் படவேண்டும்.

பகிரங்க விசாரணை வேண்டியதில்லை:- கோர்ட்டுகளில் செய்யப்படும் விசாரணைகள் எல்லாம் பகிரங்கமாக (open court) நடத்தப் படவேண்டுமென்று பொது விதி இருந்தாலும் - விவாகரத்துச் சட்ட சம்பந்தமாகப் போடப்படும் மனுக்களைத் தனி அறையில் (with closed doors) பகிரங்கமாக இல்லாமல் விசாரிக்க வேண்டுமென்று எந்தக் கட்சிக்காரர் கேட்டுக் கொண்டாலும், நீதிபதிக்கு அவ்விதம் விசாரிப்பதுதான் சரி என்று தோன்றினலும்,

பகிரங்க விசாரணை வேண்டியதில்லை. தனி அறையில் இவ்வழக்குகள் விசாரிக்கப்பட வேண்டும்.

நான்கு மாதங்களாவது மனுவை விசாரிக்காமல் ஒத்தி வைக்கவேண்டும்:—விவாகரத்துக் கோரி செய்யப்படும் மனுக்களில், இரு கட்சிக்காரர்களுக்குமிடையே இருக்கும் விவாத பிரச்னைகள் (Issues) என்ன என்ன என்று நீதிபதி குறித்துக்கொண்ட பிறகு, குறைந்தது 4 மாதங்களாவது மனுவின் விசாரணையை ஒத்திப்போட வேண்டும். அதற்குப் பிறகும் எந்த விஷயத்தையும் ருசுப்பிக்க, சாக்ஷிகள் அல்லது ருசு வேண்டுமென்று நீதிபதி வற்புறுத்தலாம்.

விவாகரத்துச் செய்யப்பட்ட பிறகும் மனைவிக்கு ஜீவனும்சம் அளிக்கலாம்; அதற்குப் புருடனுடைய சொத்தை ஜவாப்தாரியாக்கலாம்.

விவாகரத்துச் செய்யும் நீதிபதியே, அதே தீர்ப்பினால், சில சந்தர்ப்பங்களில் விவாகரத்து அடைந்த ஸ்திரீயின் ஜீவனத்திற்கும் வகை செய்ய உரிமை உண்டு. விவாகரத்துச் சட்டத்தின் 8-ஆவது செக்ஷன்படி விவாகரத்து அடைந்த ஸ்திரீ வேறு ஒருவரை மறுபடியும் மணம் செய்து கொள்ளும் வரை அவளுக்கு ஜீவனும்சமாக எவ்வளவு தொகை அவளுடைய மாஜி கணவன் கொடுத்து வரவேண்டுமென்றும் தீர்ப்புச் செய்ய நீதிபதிக்கு உரிமை உண்டு. இவ்விஷயம் சம்பந்தமாய் இப்பொழுது கீழ்க்கண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவையாவன:-விவாகரத்துக்கு முன் கணவனாக இருந்தவர் விவாகரத்து அடைந்த ஸ்திரீக்கு ஜீவனும்சத்திற்காக மொத்தமாக ஒரு தொகை கொடுக்கவேண்டுமென்றோ, அல்லது அவள் ஆயுள் வரை மாதா மாதம் அல்லது குறிப்பிட்ட கெடுக்களின்படி எவ்வளவு தொகைகள் கொடுத்துக் கொண்டுவர வேண்டுமென்றோ உத்தரவிடலாம்; அப்படிக் கொடுக்கப்பட வேண்டிய தொகைகளுக்கு, அவசியமானால் கணவனுடைய சொத்துக்களை ஜாமீன் பாத்தியமாக ஏற்படுத்தலாம். அந்த ஸ்திரீக்குச் சொந்த சொத்துக்கள் ஏதாவது இருந்தால் அது விஷயத்தையும், புருடனுக்குச் சொத்துக்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதையும், தம்பதிகளின் நடத்தையையும் — எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்து மேற்கண்ட ஜீவனும்சத் தொகையை நீதிபதி நிர்ணயம் செய்யவேண்டும். மனு முடிவடைந்த பிறகும் கூட சந்தர்ப்பங்களின் மாறுதல்களால், அத்தொகையைக் குறைக்க வேண்டுமென்றோ, கூடுதலாக்க வேண்டுமென்றோ, ரத்து செய்ய வேண்டுமென்றோ, மனுபோட இருதரப்பினருக்கும் இவ்விதிகளால் பாத்தியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அம்மனுவை விசாரித்து, நீதிபதி யுக்தமான உத்தரவு செய்யலாம். மேலும் ஜீவனும்சம் பெற்று வரும் ஸ்திரீ வேறு ஒருவரை மணம் செய்து கொண்டு விட்டதாகவாவது, விபசாரத்தில் ஈடுபட்டிருப்பதாகவாவது ருசுவானாலும், முன்பு அளிக்கப்பட்ட ஜீவனும்ச உத்தரவை மாற்றவும் ரத்துச் செய்யவும் நீதிபதிக்கு உரிமை உண்டு. விவாகரத்து மனுக்களில் ஏற்படும் தீர்ப்புக்களின் பேரில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ள உரிமை உண்டு. இது சட்டத்திலேயே இருக்கிறது. இது தவிர, ஜீவனும்சம் விஷயமாய் நீதிபதி செய்த உத்தரவைப் பின்பு மேற்கண்டபடி மாற்றியோ ரத்து செய்தோ அளிக்கப்படும் தீர்ப்பின் பேரிலும் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளலாமென்று இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விதிகள் இடங்கொடுக்கின்றன. விவாகரத்துத் தீர்ப்புக்களின் பேரிலும், ஜீவனும்சம் சம்பந்தமான தீர்ப்புக்களின் பேரிலும் தீர்ப்புத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யவேண்டும். அப்பீல்கள் மற்ற சிவில் அப்பீல்களைப்போலவே இருக்கவேண்டும். எந்தத் தீர்ப்பின் மீது அப்பீல் செய்யப்படுகிறதோ அத்தீர்ப்பின் நகல் அப்பீல் மெமோவுடன் தாகல் செய்யப்பட வேண்டும். மற்ற சிவில் அப்பீல்களுக்கு எப்படி அப்பீல் கெடு கணக்கு செய்யப்படுமோ, (அதாவது காலாவதிச் சட்டத்தின் 5 முதல் 12 வரை உள்ள செக்ஷன்

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
187706
சென்னை-600 008

களின் படி,) அப்படியே தான் இந்த அப்பீல்களுக்கும் கணக்குச் செய்யவேண்டும்.

விவாகம் செல்லாவிட்டாலும் ஒரு சந்தர்ப்பத்தில் குழந்தைகளுக்கு வார்சு பாத்தியம் உண்டு:—பலதாரத் தடைச் சட்டத்தின் 4-ஆவது செக்ஷன்படி, இச்சட்டம் அமுலுக்கு வந்தபின் ஒரு இந்து தம் மனைவி உயிருடன் இருக்கும்போது, வேறு ஒரு ஸ்திரீயை மணம் செய்து கொண்டாலும் (அப்படி கணவன் உயிருடன் இருக்கும்போது மனைவி வேறு ஒருவரை மணம் செய்து கொண்டாலும்) இரண்டாவதாகச் செய்து கொள்ளும் 'மணம்' சட்டப்படி செல்லாது; குற்றமுமாகும். கலியாணமே செல்லாமலிருப்பதால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் சட்டப்படி அவர்களுக்கு "வார்சு"கள் (legitimate children) ஆகமாட்டார்கள். ஆனால் ஒரு சந்தர்ப்பத்தில் மட்டில் இவ்விதச் சட்டவிரோதமான கலியாணத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கும் சட்ட பூர்வமான கலியாணத்தில் பிறந்த குழந்தைகளுக்குள்ள பாத்தியங்கள், இவ்விதிகளால், அளிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, முதல் மனைவி இறந்து போய்விட்டதாக உண்மையில் புருடன் பூர்ணமாக நம்பி வேறு ஒரு ஸ்திரீயை மணம் செய்து கொண்டாலும்; அதே போல் புருடன் இறந்து போய்விட்டதாக உண்மையில் மனைவி பூர்ணமாக நம்பி வேறு ஒரு கணவனை மணம் செய்து கொண்டாலும் பின்பு [illegible] செத்துப் போய்விட்டதாக அவர்கள் நினைத்தார்களோ அவர் உயிருடன் இருப்பது தெரிந்து அவர்கள் செய்துகொண்ட மணம் செல்லாதென்று கோர்ட்டில் அது சம்பந்தமாய் வழக்கு ஏற்பட்டு அதில் தீர்ப்புச் சொல்லும்போது கோர்ட்டின் தீர்ப்பு அளிப்பதற்கு முன் வரை அவர்களுக்குப் பிறந்திருக்கும் குழந்தைகள் (வயிற்றிலிருக்கும் குழந்தைகள் உள்பட) யார் யார் என்று நீதிபதியின் தீர்ப்பிலேயே குறிப்பிடப்படவேண்டும். அக்குழந்தைகள், தங்களுடைய தாய் தகப்பனுடைய சொத்துக்களுக்குச் சட்ட பூர்வமான குழந்தைகளைப்போல் வார்சாவார்கள். அதேபோல் கணவனோ, மனைவியோ பைத்தியம் என்ற காரணத்தால் விவாகம் ரத்து செய்யப்பட்டாலும், அவர்களுக்கு தீர்ப்புத் தேதிக்கு முன்பு பிறந்த குழந்தைகளையும் (வயிற்றிலிருக்கும் குழந்தைகள் உள்பட) நீதிபதி குறிப்பிட வேண்டும். இவர்களும் சட்டப்படிக்கான வார்சுகளாவார்கள்.

[**குறிப்பு:**—சென்னை பலதாரத் தடை—விவாகரத்துச் சட்டம் - "வக்கீல்" 1949 மே மாத இதழில் விளக்கப்பட்டுள்ளது. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விதிகளை விளக்கம் செய்வதற்காக மட்டில் அது சம்பந்தமாய், சட்டத்தில் உள்ள ஷரத்துக்களும் மேலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.]

"வக்கீல்" பிரசுரங்கள்—2.

ஷாப் சட்டம்

விலை ரூ. 1—8—0. (தபால் சார்ஜ் பிரத்தியேகம்.)

ஷாப் சட்ட செக்ஷன்கள், ரூல்கள், நமூனாக்கள், விதிவிலக்குகள் எல்லாம் விஷய வாரியாக தொகுக்கப்பட்டு மிக எளிய தமிழ் நடையில் விளக்கி எழுதப்பட்டுள்ளது.

குறிப்பு:—"வக்கீல்" விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேர்ந்திருப்பவர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இப்புத்தகம் கிடைக்குமிடம்:—

"வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, :: கும்பகோணம்.

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

ஸ்ரீ ராம படத்தின் முன்பு ஒரு ஸ்திரீ நடனமாடுவது சென்னை தேவதாசிச் சட்டப்படி குற்றமாகுமா?

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதி: நீதிபதி கனம் கோவிந்தமேனன் அவர்கள்

ஆதாரம்: 1951 (1) மதராஸ் லா ஜர்னல் 234

சென்னை-தேவதாசிச் சட்டம் என்பது 1947 ஆம் வருடத்திய 31 ஆவது சென்னைச் சட்டம். (Madras Deva dasis-Prevention of Dedication Act — 1947) கோயில்களில் ஸ்திரீகளுக்குப் பொட்டுக்கட்டும் பழக்கத்தை ஒழிக்கவே இச்சட்டம் இயற்றப்பட்டது. பொட்டுக்கட்டிக்கொள்வதும் அதற்கு உடந்தையாக இருப்பதும் இச்சட்டப்படி குற்றங்களாகும். தவிர, ஒரு கோயிலுக்குள்ளோ மடங்கள் முதலிய மத சம்பந்தமான ஸ்தாபனங்களுக்குள்ளோ ஒரு ஸ்திரீ நடனமாடினால் அதுவும் குற்றம்; மேலும் கோயில் அல்லது மதஸ்தாபனங்களிலுள்ள விக்கிரகங்களை ஊர்வலமாக வெளியே எடுத்துச் செல்லும்போது அந்த ஊர்வலத்தில் ஒரு ஸ்திரீ நடனமாடினாலும் குற்றம்; அல்லது அவ்வித விக்கிரகங்களைக் குறித்து வெளியே நடத்தப்படும் உற்சவங்களில் ஒரு ஸ்திரீ நடனமாடுவதும் குற்றம். 16 வயது பூர்த்தியான ஒரு ஸ்திரீ மேற்கண்டபடி பொட்டுக்கட்டிக் கொண்டாலும் அல்லது மேற்கண்ட மூன்று சந்தர்ப்பங்களில் நடனமாடினாலும், அவளும் அதற்கு உடந்தையாக யார் இருந்தாலும், எல்லோரும் குற்றம் செய்பவர்களாவார்கள். ஆறுமாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இதுதான் இச்சட்டத்தின் முக்கிய ஷரத்துக்கள்.

பிரஸ்தாப வழக்கில், குடிவாடாவிலுள்ள ஒரு மோட்டார் பஸ்காரர்கள் ஸ்ரீ ராமநவமி உற்சவம் நடத்தினார்கள். தங்கள் ஆபீசுக்கு எதிரில் ஒரு பந்தல் போட்டு அதில் ஸ்ரீ ராமர், லக்ஷ்மணர், சீதை இவர்களுடைய கலர் படங்கள் வைக்கப்பட்டன. அன்று இரவு கலவந்துலு வகுப்பைச் சேர்ந்த இரண்டு ஸ்திரீகள் அப்படங்களுக்கெதிரில் நடனம் ஆடினார்கள். இப்படிச் செய்தது தேவதாசிச் சட்டப்படி குற்றமென்று மோட்டார் பஸ் சொந்தக்காரர் மீதும், நடனமாடிய இரண்டு ஸ்திரீகள் மீதும், தவில் அடித்தவர், ஹார்மோனியம் வாசித்தவர், நாதசுரம் வாசித்தவர் இவர்கள் மீதும் கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டது. கீழ்க்கோர்ட்டில் இவர்கள் செய்தது குற்றமல்ல என்று விடுவிக்கப்பட்டார்கள். அதன்பேரில் சர்க்கார் யாதொரு அப்பீலும் செய்யவில்லை. இருந்தாலும் குடிவாடா டவுன் கலவந்தல சங்கரண சங்கம் என்ற சபையின் காரியதரிசி சென்னை ஹைகோர்ட்டில் எதிரிகளை விடுதலை செய்தது தவறென்றும் மனுக் கொடுத்தார். இம்மனுவை விசாரித்த உயர் நீதிபதி அவர்களும் தேவதாசிச் சட்ட ஷரத்துக்களை ஆராய்ந்து பார்த்து இது

குற்றமாகாதென்றே அபிப்பிராயப்பட்டனர். நடனமாடுவது போலேகண்ட மூன்று சந்தர்ப்பங்களில்தான் இச்சட்டத்தால் தடுக்கப்பட்டு குற்றமாக்கப்பட்டிருக்கிறது. உற்சவ காலத்தில் நடனமாடுவது ஒரு குற்றம்தான். ஆனால் ஒரு கோயில் அல்லது மடம் போன்ற மதஸ்தாபனத்தில் பிரதிஷ்டை செய்திருக்கும் உற்சவ மூர்த்தி போன்ற விக்கிரகங்களை வெளியே எடுத்துவந்து அவ்விக்கிரகங்களுக்கு முன்னிலையில் அதற்காக நடத்தப்படும் உற்சவத்தில் நடனமாடினால்தான் இச்சட்டப்படி குற்றமாகுமென்றும்; கோயில், அல்லது மத ஸ்தாபனங்களுக்குச் சம்பந்தமில்லாத ஸ்ரீ ராமர், லெக்ஷ்மணர், சீதை இவர்களின் கலர் படங்கள் அப்படி ஆகாதென்றும்; உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, எதிரிகளை விடுதலை செய்தது சரிதான் என்று தீர்ப்பளித்தனர். விடுதலை அடைந்தவர்கள் மீது சர்க்கார் மேல் நடவடிக்கை நடத்தாமலிருக்கும்போது, ஒரு தனி மூன்றாம் நபர் இவ்விதம் மேல் கோர்ட்டுகளில் மனுக் கொடுத்தால் அதை விசாரிக்க வேண்டுமா என்ற பிரச்னை இவ்வழக்கில் எழுந்தாலும் அதைப் பற்றி யாதொரு அபிப்பிராயமும் சொல்லத் தேவையில்லை என்றும் நீதிபதி அவர்களின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பல பாகஸ்தர்களுக்குச் சொந்தமான பொதுக் காலி இடத்தை ஒரு பாகஸ்தரிடம் மட்டில் கிரயம் பெற்று அஸல் கிரயதார் கட்டிய வீடுகள் இடிக்கப்பட்டன.

கோர்ட்: அலகாபாத் ஹைகோர்ட்.

நீதிபதிகள்: நீதிபதிகள் அகர்வாலா அவர்களும் பார்கவா அவர்களும்.

ஆதாரம்: 1951 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—அலகாபாத் 338.

பல பாகஸ்தர்களுக்குச் சொந்தமாயுள்ள ஒரு காலி இடத்தில் ஒரு பாகஸ்தர் மட்டில் தம் தனிப் பணத்தைப் போட்டு ஒரு வீடோ, கட்டடமோ, கட்டுவதற்கு முன், இது சம்பந்தமான சட்ட விஷயங்களை நன்கு அறிந்துகொண்டு செய்வதுதான் நலம். இல்லாவிட்டால் பல சங்கடங்கள் ஏற்படக் கூடும். அதைப்போலவேதான், பல பாகஸ்தர்களுக்குச் சொந்தமாக உள்ள ஒரு இடத்தை ஒரு பாகஸ்தரிடம் மட்டில் கிரயம் பெற்று அதில் பணம் செலவு செய்து வீடோ, கட்டடமோ கட்டும் கிரயதாருடைய நிலைமையும்.

சட்டமென்னவென்றால் - ஒரு பொதுச் சொத்தை, ஒவ்வொரு பாகஸ்தரும், அனுபவிக்கப் பாத்தியமுள்ளவர்தான்; ஒரு பாகஸ்தர் அனுபவிக்கக் கூடாதென்று சாதாரணமாய் மற்றப் பாகஸ்தர்கள் சொல்ல முடியாது. எந்தப் பாகஸ்தரும் பொதுச்சொத்தைப் பாகம் செய்துகொண்டு தம் வீதத்தைத் தனியாகப் பிரித்து எடுத்துக்கொண்டு அதைத் தனியாக அனுபவிக்கலாம். பொதுச்சொத்தைப் பாகம் செய்யக்கூடாதென்று ஒரு பாகஸ்தரும் சொல்ல முடியாது. அவ்விதம் பாகம் செய்து கொள்வதற்கு முன் ஒரு தாற்காலிக ஏற்பாட்டின் பேரில் ஒவ்வொரு பாகஸ்தரும் அப்பொதுச் சொத்தில் தனித் தனிப் பாகத்தைத் தனித் தனியாய் அனுபவித்தும் வரலாம். ஆனால் இதற்கு எல்லாப் பாகஸ்தர்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சம்மதிக்கவேண்டும். பக்காவாகப் பாகம் செய்து கொள்வதற்குமுன், இவ்விதம் தாற்காலிகமாக ஒவ்வொரு பாகஸ்தரும் பொதுச்சொத்தில் ஒவ்வொரு பாகத்தைத் தனித் தனியாக அனுபவித்தாலும், அவரவர் அனுபவிக்கும் பாகத்தில் அவருக்கு யாதொரு தனி உரிமையும், பிரத்தியேக பாத்தியமும் ஏற்பட்டு விடாது. பாகம் ஏற்படும் வரை அது ஒரு தாற்காலிக ஏற்பாடாகவே இருக்கும். அவ்விதம் ஒரு பாகத்தை அனுபவிக்கும் அப்பாகஸ்தர் அப்பாகத்தை ஒருவருக்கும் விற்றுவிட முடியாது; அதில் மற்றப் பாகஸ்தர்களுடைய சம்மதமின்றி வீடோ கட்டடமோ கட்டிக்கொள்ளவும் முடியாது. அப்படி அவர் கட்டிவிட்டாலும் மற்றப் பாகஸ்தர்கள் அதை இடித்துவிடவேண்டுமென்று கேட்டால், அதை இடித்து விடும்படிதான் கோர்ட்டிலும் தீர்ப்பு ஏற்படும். அப்படிதான் இந்த அலகாபாத் வழக்கிலும் முடிவான தீர்ப்பு ஏற்பட்டது.

இரண்டு பாகஸ்தர்களுக்குச் சொந்தமாக ஒரு காலி இடம் இருந்தது. இருவரும் பாகம் செய்து கொள்ளவில்லை. பாகம் செய்து கொள்ளாவிட்டாலும் ஒவ்வொரு பாகஸ்தரும் தனித் தனியே தனித்தனி பாகங்களை அனுப வித்து மட்டில் வந்தார்கள். நேரடியாக இவ் விதம் அனுபவித்து வரவேண்டுமென்று ஒப் புக்கொண்டார்களோ இல்லையோ தெரியாது; ஆனால் ஒருவர் அனுபவிப்பதை மற்றவர் ஆட் சேபிக்கவில்லை.

இவ்விதம் சில காலம் ஆனபின் இவ்விரு பாகஸ்தர்களில் ஒருவர் மட்டில், தாம் அனுப வித்து வரும் இடத்தின் ஒரு பாகத்தை 1929ல் ஒருவருக்கும், மற்றொரு பாகத்தை 1932ல் வேறு ஒருவருக்கும் விற்று விட்டார். (இந்த விற்பனைகளுக்கு மற்றப் பாகஸ்தர் சம்மதிக்க வில்லை என்பதைக் கவனிக்கவும்) இந்த இடங் களைக் கிரயம் வாங்கியவர்கள் சும்மா இருக்க வில்லை. தாங்கள் கிரயம் வாங்கிய காலி இடங்களில் வீடுகள் கட்டிக்கொள்ள ஆரம் பித்தனர். அதற்காக லைசென்சு வேண்டு மென்று முனிசிபாலிட்டிக்கு மனுப்போட்டனர். இது தெரிந்த மற்றப் பாகஸ்தர் இவர்களுக்கு அனுமதி (லைசென்சு) கொடுக்கக் கூடா தென்றும் அவர்களுக்கு இப்பொதுச் சொத்தில் வீடு கட்டப் பாத்தியமில்லை என்றும் முனிசி பாலிட்டியில் ஆட்சேபித்தார். இச்சட்டங்களை எல்லாம் முனிசிபாலிட்டியார் எதற்குக் கவனிக்க வேண்டும்! அவர்கள் ஆட்சேபித்த பாகஸ்த ருடைய ஆட்சேபனையை நிராகரித்து, கிரயதார் களுக்கு வீடு கட்டிக்கொள்ள, லைசென்சு கொடுத்துவிட்டனர். கிரயதார்களும் ஏராள மாகப் பணம் செலவுசெய்து அவசர அவசரமாக வீடுகளைக் கட்டி, 1934க்குள் முடித்துவிட்டனர்.

ஆட்சேபனை செய்த பாகஸ்தர் 1939ல் கோர்ட்டில் தாவாசெய்தார். பொதுச் சொத்தில் தம்முடைய அனுமதியோ சம்மதமோ இல்லாமல் கட்டப்பட்டிருக்கும் கட்டடங்களை இடிக்க வேண்டுமென்று பரிகாரம் கேட்டார். முதல் கோர்ட்டில் வாதியின் தாவா தள்ளப் பட்டது. வாதியும் மற்றப் பாகஸ்தரும் ஒரு ஏற்பாட்டின் பேரில்தான் தனித் தனியே பாகத்தை அனுபவித்து வந்தார்கள் என்றும் ஆகையால் அவரவர் அனுபவிக்கும் பாகத்தை அவரவர் விற்பனை செய்துவிடப் பாத்திய முண்டென்றும்; 1934-லேயே கட்டடங்கள் கட்டி முடிந்துவிட்டாலும் 5 வருடங்கள் கால தாமதம் செய்து வாதி தாவா செய்திருப்பது அவர் மறை முகச் சம்மதம் கொடுத்தபின் (doctrine of acquiescence) திரும்பிக் கொள்வதாகும் என்றும் இரண்டு காரணங் களினால் முதல் கோர்ட் நீதிபதி வாதியின் வழக்கைத் தள்ளிவிட்டார்.

அடுத்த அப்பீல் கோர்ட்டில் வாதியின் நடத்தையால் யாதொரு மறை முகச் சம்மதமும் (acquiescence) ஊகிக்க முடியாதென்று நீதி பதி அபிப்பிராயப்பட்டு, வாதிக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. அதாவது கட்டடங்கள் இடிக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பு ஆயிற்று.

இதன் பேரில் ஏற்பட்ட இரண்டாவது அப்பீலில் அலகாபாத் ஹைகோர்ட்டின் இரண்டு உயர் நீதிபதிகளும் அவ்விதமேதான் அபிப் பிராயப் பட்டனர். இது சம்பந்தமான சட்டமும் உயர் நீதிபதிகளால் விளக்கப் பட்டுள்ளது. பொதுச் சொத்தில் ஒரு பாகஸ்த ருடைய 'சம்மதம்' இல்லாமல் மற்றப் பாகஸ்தர் கட்டடம் கட்டக் கூடாது என்பதுதான் சட்டம்; ஆனால் இச்சம்மதம் என்பது வாய் மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தான் இருக்கவேண்டு மென்பதில்லை. நடத்தையாலும் இருக்கலாம். உதாரணமாக, ஒரு பாகஸ்தர் மட்டில் பொதுச் சொத்தில் கட்டடம் கட்டி வருவதை மற்றவர் தெரிந்தும் ஆட்சேபிக் காமலும், தடுக்காமலும் வெகுகாலம் சும்மா இருந்து விட்டாலே, அவர் தம் நடத்தையால், மறைமுகமாகத் தம் சம்மதத்தைக் கொடுத்தது போலவேதான் ஆகும். அதற்குச் சட்டம் வேறு. ஏனென்றால் சம்மதத்தை எவ்வித மாகவோ கொடுத்தவர் மறுபடியும் அதை மறுக்க முடியாது. ஆனால் இவ்வழக்கில் அவ்வித மறை முகச் சம்மதம் எப்படி ஊகிக்க முடியும்? கட்டடம் கட்டுவதற்கு லைசென்சு கேட்கும் போதேதான் வாதி அதை ஆட்சேபித்துத் தடுத்திருக்கிறாரே, இது சும்மா இருந்ததாக

ஆகுமா? ஆகாது. ஆட்சேபித்தபின் சட்டப் படிக்கான காலாவதி காலத்திற்குள் தாவா செய்த வாதிக்குச் சட்டப்படிக்குள்ள பரிகாரம் அளிக்கப்பட வேண்டியதுதான் என்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு, கிரயதார்கள் கட்டிய கட்டடங்கள் இடிக்கப்பட வேண்டியவை தான் என்று தீர்ப்பளித்தனர்.

ஷாப் சட்ட வழக்கில் ஹைகோர்ட்டின் தீர்ப்பு—நீக்கப்பட்ட சிப்பந்தியின் தனி உரிமை—தனித் தகராறு வேறு; தொழில் தகராறு வேறு.

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதிகள்: பிரதம நீதிபதி கனம் ராஜமன்னார் அவர்களும் நீதிபதி கனம் விசுவநாத சாஸ்திரி அவர்களும்.

ஆதாரம்: 64-லா வீக்லி-210.

ஷாப் சட்ட சம்பந்தமான ஒரு முக்கிய பிரச்னை இவ்வழக்கில் உயர் நீதிபதிகளால் பரிசீலனை செய்யப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது. வழக்கின் விவரம்:—யூனைடெட் கமர்ஷியல் பாங்கின் மதுரை கிளை ஆபீசில் வேலை செய்து வந்த ஒரு சிப்பந்தி, அப்பாங்கின் வாடிக்கைக் காரர் ஒருவரிடம் சரிவர நடந்து கொள்ள வில்லை என்ற காரணத்தால், 30-6-1949-ல் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அச்சிப்பந்தி, ஷாப் சட்டப்படி சென்னை லேபர் கமிஷனருக்கு அப்பீல் செய்தார். ஷாப் சட்டத்தின் 41 ஆவது செக்ஷன் என்பது சிப்பந்தியை வேலையை விட்டு அகற்றுவது பற்றியது. அதன்படி ஒரு கடை அல்லது எவ்வித ஸ்தாபனத்திலும் தொடர்ந்த 6 மாதத்திற்குக் குறையாமல் வேலை செய்த எந்தச் சிப்பந்தியையும் முதலாளி தம் இஷ்டப் படி வேலையை விட்டு அகற்ற முடியாது.

அவ்விதச் சிப்பந்தியை நீக்க வேண்டுமானால்—(1) அதற்குத் தகுந்த காரணங்கள் இருக்க வேண்டும். அத்துடன் (2) அச்சிப்பந்திக்கு முன் கூட்டியே ஒரு மாதத்திற்கு முன் அவரை அவ்விதம் நீக்கப் போகும் விஷயத்தை அறிவிக்க வேண்டும். (அதாவது அது விஷயமாய் அவருக்கு 'நோட்டீஸ்' கொடுக்கவேண்டும்.) நோட்டீஸ் இல்லாவிட்டால் ஒரு மாதச் சம்பளம் கொடுக்க வேண்டும். இதற்கு ஒரே ஒரு விதி விலக்கு உண்டு. அதாவது சிப்பந்தியின் நடத்தைத் தவறால் அவர் நீக்கப்பட்டால் அவருக்கு ஒருமாத நோட்டீசோ, ஒரு மாதச் சம்பளமோ கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் நடத்தைத் தவறைப் பற்றி ஷாப் சட்டப்படி முதலாளி விசாரணை நடத்தி தகுந்த ருசுவின் மீதுதான் அவரைத் தள்ளவேண்டும்.

முதலாளியால் நீக்கப்பட்ட சிப்பந்தி அதன் பேரில் ஒரு மாதத்திற்குள் சென்னை லேபர் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம். (1) தம்மை நீக்கத் தகுந்த காரணங்கள் இல்லை என்றோ; (2) தாம் யாதொரு நடத்தைத் தவறும் செய்ய வில்லை என்றோ—இந்த இரண்டு காரணங்களில் ஏதாவது ஒன்றைச் சொல்லித்தான் சிப்பந்தி அப்பீல் செய்யமுடியும். லேபர் கமிஷனர் இவ் விஷயத்தை விசாரணைசெய்து தீர்ப்புச் சொல்லுவார். அதுதான் இவ் விஷயத்தில் முடிவான தீர்ப்பு. அதாவது லேபர் கமிஷனர் செய்த தீர்ப்பு, சரி அல்ல என்று சிவில் கோர்ட்டுகளில் முதலாளியும் சொல்ல முடியாது; சிப்பந்தியும் சொல்ல முடியாது. சிப்பந்தியைத் திரும்ப வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று லேபர் கமிஷனர் உத்திரவிட்டாலும் அதன்படி தான் நடக்கவேண்டும்.

இந்தச் செக்ஷனை அனுசரித்து பாங்கியால் நீக்கப்பட்ட சிப்பந்தி லேபர் கமிஷனருக்கு முன் சொன்னபடி 30—6—1949ல் அப்பீல் செய்தார். லேபர் கமிஷனரும் இதை விசாரிக்க ஓர் வாயிதா தேதி குறிப்பிட்டார். இதற்குப் பிறகு அச்சிப்பந்தியின் அப்பீல் முடிவடையும் முன்பு, வேறு சில விஷயங்கள் நடந்தன. அதனால் சிப்பந்தியின் அப்பீலை லேபர் கமிஷனர் விசாரணை செய்யக்கூடாதென்றும், அவருக்குச் சட்டப்படி இவ்வழக்கை விசாரிக்க அதிகாரமில்லை என்றும் பாங்குக்காரர்கள் சென்னை ஹைகோர்ட்டில் 'ரிட்' மனு நடவடிக்கை ஆரம்பித்தனர். 'ரிட்' மனுவில் பாங்குக்காரர்கள் சொன்ன காரணம் இதுதான்:- தொழில் தகராறுச் சட்டம் (The Industrial Disputes Act — 14 of 1947) என்ற மத்திய சட்டத்தின் ஷரத்துக்களின்படி முதலாளிக்கும் தொழிலாளர்களுக்குமிடையே எவ்விதமான சச்சரவுகளோ, சண்டையோ வழக்கோ ஏற்பட்டாலும் ஏற்படும்போல் தோன்றினாலும் சர்க்கார் அத்தகராறை விசாரித்து முடிவு செய்யும்படி அச்சட்டத்தால் ஏற்பட்டிருக்கும் தொழில் டிரிபுனல் (Industrial Tribunal) என்ற பிரத்தியேகக் கோர்ட்டுக்கு

அனுப்பலாம். இதை அனுசரித்து அகில இந்தியாவிலுமுள்ள பல பாங்குகளுக்கும் அவைகளின் சிப்பந்திகளுக்குமிடையே ஆள் குறைப்பு, வேலையைவிட்டு அகற்றல், சம்பள உயர்வு போன்ற பல விஷயங்களில் ஏற்பட்டிருக்கும் தகராறுகளைக் கல்கத்தாவிலுள்ள ஒரு தொழில் டிரிபுனல் விசாரித்து மத்தியஸ்த முடிவுசொல்ல வேண்டுமென்று, 21—2—1950-ல் மத்திய சர்க்கார் ஓர் உத்தரவு பிறப்பித்தனர். இவ்வுத்தரவில் குறிப்பிடப்பட்ட பல பாங்குகளில் யுனைடெட் கமர்ஷியல் பாங்கும் ஒன்று. அதன் பேரில் கல்கத்தா தொழில் டிரிபுனல் வழக்கை விசாரிக்கத் தொடங்கி ஓர் உத்தரவிட்டனர். அதன்படி இந்தப் பாங்குகளால் நீக்கப்பட்ட சிப்பந்திகள் 15—3—1950-க்குள் தங்கள் கட்சிகளை மேற்படி தொழில் டிரிபுனலுக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று கெடு கண்டிருந்தது.

யுனைடெட் கமர்ஷியல் பாங்கினால் நீக்கப்பட்டு, சென்னை லேபர் கமிஷனரிடம் அப்பீல் செய்த முன் சொல்லப்பட்ட சிப்பந்தி கல்கத்தா தொழில் டிரிபுனலுக்கு யாதொரு தகவலும் (குறிப்பிட்ட காலத்திலோ, பிறகோ) தெரிவித்துக் கொள்ளவில்லை. மத்திய சர்க்கார் இத்தகராறு சம்பந்தமாய் தொழில் டிரிபுனல் விசாரணை செய்யவேண்டுமென உத்தரவிட்ட பிறகு, அந்தத் தொழில் டிரிபுனலைத் தவிர வேறு எந்த அதிகாரிக்கும் அவ்விஷயத்தை விசாரிக்க அதிகாரமில்லை என்றும், ஆகையால் சென்னை லேபர் கமிஷனர் அச்சிப்பந்தி செய்திருக்கும் அப்பீலை விசாரிக்க அதிகாரமில்லை என்றும் பாங்குக்காரர்கள் ஹைகோர்ட்டில் கட்சி சொன்னார்கள். இதை உயர்நீதிபதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஷாப் சட்டம், தொழில் தகராறுகள் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களிலும் அடங்கியவை தனித்தனி விஷயங்களைப்பற்றி என்றும் ஒரே விஷயமல்லவென்றும் நீதிபதிகள் சட்ட விளக்கம் செய்திருக்கின்றனர்.

ஒரு தொழிற்சாலை அல்லது ஸ்தாபனத்தில் ஏற்படும் தகராறுகள் அல்லது வழக்குகள் இரண்டு வகைப்படும். (1) ஒரு ஸ்தாபனத்தின் முதலாளிக்கும், அதில் வேலை செய்யும் ஒரு தனிச் சிப்பந்திக்கு மட்டில் ஒரு வழக்கோ தகராறோ ஏற்படலாம். இதைத் 'தனித்தகராறு' (Individual Dispute) என்று சொல்லலாம். இதில் மற்றத் தொழிலாளர்களுக்கோ சிப்பந்திகளுக்கோ சம்பந்தமில்லை. உதாரணமாக, ஒரு சிப்பந்தி நீக்கப்பட்டால் அந்தத் தொழிற்சாலை அல்லது ஸ்தாபனத்தில் வேலை செய்யும் மற்றச் சிப்பந்திகள், 'அவரை நீக்கியது சரிதான்' என்று நினைக்கலாம். மற்ற சிப்பந்திகளுக்கு இதில் அக்கரை இல்லை. இது ஒரு 'தனித்தகராறு' இவ்விதமான தனித் தகராறுகளை விசாரித்து, தீர்ப்பளிக்கவே ஷாப் சட்டத்தில் லேபர் கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு 'தொழில் தகராறு' அல்ல. இது ஒரு வகைத் தகராறு. (2) மற்றொரு வகைத் தகராறுதான் 'தொழில் தகராறு' (Industrial Dispute) என்பது. இது ஒரு தனிப்பட்ட நபரைக் குறித்த தகராறு அல்ல. இவ்விதமான தகராறுகளில் முதலாளி ஒரு பக்கமும் அதில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அல்லது சிப்பந்திகள் ஒரு பக்கமும் இருப்பார்கள். இவ்வித வழக்குகள் எல்லாச் சிப்பந்திகள் அல்லது தொழிலாளர்களுக்கும் பொதுவானது. யாவரையும் பாதிக்கக் கூடியது. சில சமயங்களில் ஒரு தனிப்பட்ட தொழிலாளரோ சிப்பந்தியோ நீக்கப்பட்டிருப்பதை மற்றத் தொழிலாளர்கள் கண்டித்து யாவரும் வேலைக்குப் போகாமலிருக்கலாம். அப்பொழுது தான் அத்தனித்தகராறு ஓர் தொழில் தகராறு ஆகிவிடும். இவ்விதமான தொழில் தகராறுகளை விசாரிக்கத்தான் தொழில் தகராறுச் சட்டம் (Industrial Disputes Act) ஏற்பட்டிருக்கிறது. அச்சட்டப்படிக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள டிரிபுனல்கள் இவ்வித தொழில் தகராறுகளை விசாரிப்பார்கள்.

ஆகையால் இவ்வழக்கில் எல்லாச் சிப்பந்திகளும் அக்கறை காட்டும் தொழில் தகராறுகள் ஏற்பட்டு அவ்விஷயத்தை விசாரித்து, கல்கத்தா தொழில் கோர்ட் தீர்ப்பளிக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் உத்தரவிட்டிருந்தாலும், இத் தனிப் பட்ட சிப்பந்தி தம் ஒருவரை நீக்கியது பிசகு என்று லேபர் கமிஷனருக்கு ஷாப் சட்டப்படி செய்திருக்கும் அப்பீலை லேபர் கமிஷனர் விசாரித்து முடிவு செய்யப் பூர்ண அதிகாரமுள்ளவரென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர். பாங்கின் ரிட் நடவடிக்கைத் தள்ளப்பட்டது.

[குறிப்பு:— இப்பொழுது, நீக்கப்பட்ட சிப்பந்தி தொழிலாளர் நஷ்ட ஈடு கமிஷனர் (Commissioner for workmen's compensation) என்ற அதிகாரிக்கு அப்பீல் செய்ய வேண்டுமென்று ஷாப் சட்ட விதி திருத்தப்பட்டிருக்கிறது. 28—3—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் 1 ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 93 பார்க்கவும்.]

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே.**

43. **கேள்வி:** (நடராஜன் - வீரவநல்லூர்) ரைஸ்மில்களில் வேலை செய்பவர்களுடைய தினசரி குறைந்த பட்சக் கூலி விகிதங்களை நிர்ணயித்து 1-1-1951 முதல் அமுலுக்கு வந்துள்ளதும் சர்க்கார் பிரசுரித்துள்ளதுமான உத்தரவு, கூலிக்கு பட்டில் நெல் அரைத்துக் கொடுக்கும் சிறிய ரைஸ்மில்களுக்கும் பொருந்துமா?

பதில்: எல்லா வகை ரைஸ்மில்களுக்கும் பொருந்தும். ("வக்கீல்" 1951 ஜனவரி இதழில் "தொழிலாளர் பகுதி"யில் குறைந்த பட்சக் கூலிச் சட்டம் விளக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்).

44. **கேள்வி:** (சுப்பிரமணியம் - கரூர்) ஒரு கடையில் சம்பள ஆள் இல்லாமல் அண்ணன் தம்பி மூன்று பெயரும் நடத்தும் கடையை ஷாப் சட்டப்படி வாரத்தில் ஒரு நாள் மூட வேண்டுமா?

பதில்: மூடவேண்டும். இவர்கள் ஷாப் சட்ட ரிஜிஸ்டர்கள் வைத்துக்கொள்ளவேண்டியதில்லை. தினசரி கடையைத் திறந்து மூடும் மணி நேர விதியும் இவர்களுக்குக் கிடையாது. இவை இரண்டு விஷயங்களில் தான் இவர்களுக்கு விதி விலக்கு. (18-4-1950 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I, பக்கம் 947-"வக்கீல்" 1950 மே இதழ் பக்கம் 24 பார்க்கவும்).

45. **கேள்வி:** (ஆறுமுகம் - கனியூர்) இந்து சட்டப்படி ஏக குடும்பம், குடும்பச் சொத்து, குடும்பத் தொழில், முதலியவை உண்டா? குடும்பத் தலைவருக்கும் குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கும் தகராறு ஏற்பட்டால், தலைவர் உயிருடன் இருக்கும் போது பாகப்பிரிவினை செய்யச் சட்டம் இடம் கொடுக்குமா? குடும்பத் தலைவராக இருப்பவர் பெயரில் இருக்கும் சொத்தில் குடும்ப அங்கத்தினர்களுக்குப் பாத்தியதை உண்டா?

பதில்: இந்து சட்டத்தில்தான் ஏக குடும்பம் (பிரிபடாத குடும்பம்) என்பதெல்லாம் உண்டு. இக்குடும்பத்திற்கு உள்ள சொத்துக்களுக்குத்தான் 'குடும்பச் சொத்து' என்று பெயர். இக்குடும்பம் நடத்தும் தொழில் 'குடும்பத்தொழில்' எனப்படும். குடும்பத் தலைவருக்கும் அதன் ஓர் அங்கத்தினருக்கும் தகராறு ஏற்பட்டாலும், யாதொரு தகராறும் ஏற்படாவிட்டாலும், எந்த அங்கத்தினரும் எந்த நிமிஷத்திலும், இஷ்டப்பட்டால், தம் பாகத்தைப் பிரிவினை செய்து கொள்ள உரிமை உண்டு. பிரிவினை செய்து கொள்ள யாதொரு காரணமும் இருக்கவேண்டியதில்லை. குடும்பத் தலைவர் பெயரில் இருக்கும் சொத்து, குடும்பச் சொத்தாக இருந்தால் அதில் எல்லோருக்கும் பாத்தியம் உண்டு. ஆனால் அச்சொத்து, குடும்பத்தலைவரின் தனிச் சொத்தாக இருந்தால், மற்றவர்களுக்குப் பாத்தியமில்லை,

46. **கேள்வி:** (முத்துசாமி - கோயமுத்தூர்) அண்ணன் தம்பிகள் மூவர். (இந்துக்கள்) தகப்பனார், பாட்டனார் சம்பாதித்த சொத்து இருக்கிறது. ஆனால் அண்ணன் தம்பிகள் பொதுச் சொத்து ஒன்றையும் அடையாமல் தனித்தனியாக இருந்து சம்பாதித்துச் சாப்பிடு கிறார்கள். இவர்களில் இளையவன் அதிகமாகச் சம்பாதித்து விடுகிறான். தகப்பனார் இறந்த பிறகு, பொதுச் சொத்துக்களை மூன்று மகன் களும் பாகம் செய்து கொள்ளும்போது, இளைய வன் சம்பாதித்ததில் மற்றவர்கள் பங்குபெற முடியுமா? தகப்பனார் ஒன்றும் எழுதி வைக்க வில்லை.

பதில்: பொதுக்குடும்பச் சொத்தின் உதவி யில்லாமல், இளையவன் சுயமாகச் சம்பாதித்து, பொதுச் சொத்துடன் கலக்காமல் தனிமையில் வைத்திருக்கும் சொத்துக்கள் முழுமையும் சம்பாதித்தவருடைய தனிப்பட்ட சொத்துக் களாயாகும். அவைகளில் மற்றச் சகோதரர் களுக்குப் பாகம் கிடைக்காது.

47. **கேள்வி:** (வீரப்பன் செட்டியார் - ஆண்டிப்பட்டி) தற்சமயம், மதராஸ் விற்பனை வரிச் சட்டப்படி, வெளிமாகாணங்கள் அல்லது வெளிநாடுகளிலுள்ள வியாபாரிகள் அல்லது நபர்களுக்குச் சரக்கு விற்பனை செய்து, சரக்கை ரயில், கப்பல் அல்லது போஸ்ட் மூலம் மேற்படி இடங்களுக்கு நேரே அனுப்பினால் மேற்படி விற்பனைத் தொகைக்கு விற்பனை வரி உண்டா?

பதில்: சென்னை ராஜ்யத்திலுள்ள வியா பாரி இந்த ராஜ்யத்திற்கு வெளியே உள்ள வருக்குச் சில குறிப்பிட்ட சரக்குகளை விற்பனை செய்து அச்சரக்குகளையும் சென்னை ராஜ்யத் திற்கு வெளியே அனுப்பியும் விட்டால், அவருக்கு விற்பனை வரிச் சட்டத்தில் சில சலுகைகள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. இது எல்லாச் சரக்குகளுக்கும் கிடையாது. கைத்தறி ஜவுளி, தேயிலை இவைகள் இவ்விதம் அனுப்பப் பட்டால் ஜாடா விற்பனை வரியும் கிடையாது. (விற்பனைவரிச் சட்டம் - செக்ஷன் 5). தவிர, கைத்தொழிலால் உற்பத்தி செய்யப்பட்டு முழு வேலைப்பாடுகளும் முடிந்த சில சரக்குகளை (finished articles of Industrial manufacture) சென்னை ராஜ்யத்திற்கு வெளியே உள்ளவருக்கு விற்று, அச்சரக்குகள் அவருக்கு அனுப்பப்பட்டும் விட்டால் அதற்காக வியாபாரி இங்கே கொடுத்த விற்பனை வரியில் சரிபாதியை அவர் திருப்பி (Rebate) கேட்க இடமுண்டு. (செக்ஷன் 7.) ஆனால் எந்த எந்தச் சரகு களுக்கு இவ்விதச் சலுகை காண்பிக்கப்படு மென்று சர்க்காரால் குறிப்பிடப்பட்டிருக்கின் றன. இவ்விதச் சலுகைகள் அடைய விற்பனை வரிச் சட்டத்தின் ஷரத்துக்களை நன்றாகக் கவனித்து நடக்கவேண்டும். உதாரணமாக, சரக்கு அனுப்பிய 3 மாதங்களுக்குள் வியாபாரி நமூனா 8-ன்படி வஜாவுக்கு மனுப்போட வேண்டும்.

48. **கேள்வி:** (சுப்பய்யா பிள்ளை - வேதா ரணியம்.) உப்பு விற்பனைக்கு விற்பனைவரி கிடையாது. உப்பைப் பாக்கிங் செய்யும் சாக்குக்கு விற்பனை வரி வசூலிக்கலாமா?

பதில்: சமீபத்தில் சென்னை ஹைகோர்ட் டில் தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு வழக்கில் உப்பைப் பாக்கிங் செய்யும் சாக்குக்கு மட்டில் சட்டப்படி விற்பனைவரி உண்டென்று உயர் நீதிபதிகள் தீர்ப்பளித்திருக்கின்றனர். (1950-2-மதராஸ் லா ஜர்னல் - பக்கம் 449) ஆனால் இத்தீர்ப் புக்குப் பின் உப்பைப் பாக்கிங் செய்யும் சாக்கு களுக்கும் விற்பனை வரி கிடையாதென்று சர்க்கார் விதிவிலக்கு அளித்திருக்கின்றனர்.

49. **கேள்வி:** (நரசிம்மன் - சேலம்) பஜாரில் எள்ளு அல்லது வேறு எந்த விதமான எண்ணெய் வித்துக்களையோ விலைக்கு வாங்கி அதை ஒரு நாட்டுச் செக்கில் கூலி கொத்து அரவுசெய்து, அவ்விதம் தயாரிக்கப்பட்ட எண்ணெய், புண்ணாக்குகளை மட்டில் விற்பனை செய்தால் அதற்கு விற்பனைவரி செலுத்தவேண்டுமா? அவ்விதம் விற்பனை செய்வதற்குக் கணக்கு ஏதாவது வைத்துக்கொள்ள வேண்டுமா?

பதில்: சொந்தமாக ஒரே ஒரு நாட்டுச் செக்கு மட்டில் வைத்துக்கொண்டு அச்செக்கில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் புண்ணாக் குக்குத்தான் விற்பனை வரி விதிவிலக்கு உண்டு. கூலி கொடுத்து வேறு ஒருவருடைய செக்கில் எண்ணை ஆட்டுகிறவர்களுக்கு இச்சலுகை கிடை யாது. (4-4-1950 சென்னை சர்க்கார்கெஜட்)

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள்

ரேஷன்.

பிரயாணிகள் கையுடன் ஒருவாரத்திற்கான உணவுப் பண்டம் ரேஷன் இடங்களுக்கும் எடுத்துச் செல்லலாம். பர்மிட் வேண்டியதில்லை:—ரேஷன் அமுலில் இருக்கும் இடங்களுக்குள்ளிருந்து வெளியேயும், வெளியிலிருந்து உள்ளேயும் 'பர்மிட்' அன்னியில் ரேஷன் பண்டங்கள் எதையும் ஒருவரும் எடுத்துக்கொண்டு போகக்கூடாதென்ற சென்னை 1947-ஆம் வருடத்திய ரேஷனிங் உத்தரவின் 5-ஆவது பிரிவுடன் கீழ்க்கண்ட விதிவிலக்கு சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது: உண்மையாகப் பிரயாணம் செய்பவர்கள், தங்கள் சாமான்களுடன் ஒரு பாகமாக, ஒருவாரத்திற்கு வரக்கூடிய அளவுக்கு மேற்படாமல், ரேஷன் உணவுப் பண்டங்களையும் கையுடன் எடுத்துச் செல்லலாம்; ஆனால் ரேஷனில் ஒருவாரத்திற்கு என்ன என்ன பண்டங்கள் எந்த எந்த அளவுக்குக் கொடுக்கப்படுமோ அதற்கு மேலாகவும், பாருகவும் இருக்கக்கூடாது - என்று ஒரு விதிவிலக்கு சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரயாணிகள் மட்டில் இவ்விதம் எடுத்துச் செல்ல இனி பர்மிட் வேண்டியதில்லை. இதை ஒட்டி சென்னை சிடி ரேஷன் ரெகுலேஷனும், மற்ற இடங்களுக்கான ரேஷன் ரெகுலேஷன்களும் திருத்தப்பட்டிருக்கின்றன.

(20-3-1951 - சென்னை சர்க்கார் ஜெஜட் - பாகம் II - ரூல் சப்ளிமெண்ட் - பக்கம் 47)

காகிதம்

புதிய "நியூஸ் பிரிண்ட்" கட்டுப்பாடு உத்தரவு (1951)

1950-ஆம் வருடத்திய நியூஸ் பிரிண்ட் கண்ட்ரோல் உத்தரவு ரத்து செய்யப்பட்டு மத்திய சர்க்காரால் 8-3-1951-ல் ஒரு புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்புதிய உத்தரவுப்படி "நியூஸ் பேப்பர்" அல்லது பத்திரிகைகளைத் தவிர, வேறு எந்த உபயோகத்திற்கும் "நியூஸ் பிரிண்ட்" காகிதத்தை எவரும் உபயோகிக்கக் கூடாது; அப்படி வேறு உபயோகத்திற்காக "நியூஸ் பிரிண்ட்" காகிதத்தை உபயோகிக்க, மத்திய சர்க்காரின் அல்லது அவர்களிடம் அதிகாரம் பெற்ற அதிகாரியின் அனுமதி வேண்டும். மேலும் இப்புது உத்தரவுப்படி பத்திரிகைகள் பக்கங்களின் விஸ்தீர்ணத்திற்கு ஏற்றவாறும் விலைக்கு ஏற்றவாறும் 5 வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வகைப் பத்திரிகையும் எவ்வளவு பக்கங்களுக்குமேல் பிரசரம் செய்யக் கூடாதென்றும் ஒரு அட்டவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் எந்தப் பத்திரிகையும் அதிக பக்கங்கள் போடக்கூடாது. மற்ற அம்சங்கள் முன் உத்தரவில் இருப்பது போலவே. முன்பு உள்ளதுபோலவே ஒவ்வொரு மாதமும் 7 தேதிக்குள் நமூனா II ன்படி பத்திரிகைக்காரர்களும் நியூஸ் பிரிண்ட் வியாபாரிகளும் ரிடர்ன் அனுப்பவேண்டும்.

(8-3-1951 - இந்தியா ஜெஜட் - பாகம் II - செக்ஷன் 3 - பக்கம் 184 A)

'க்யூப்'சர்க்கரை விலை நிர்ணயம்:—

அமுக்கி சதுரவில்லையாக்கப்பட்ட சர்க்கரையின் (Cube Sugar) சில்லரை வியாபார விலை காஷ்மீர் தவிர அகில இந்தியாவிலும் ஒரு பவுண்டு பொட்டணமாக இருந்தால் பவுண்டு 1க்கு ரூ. 0-11-6-க்கும், 3 பவுண்ட் பொட்டணமாக இருந்தால் பவுண்டு 1க்கு ரூ. 0-10-3-க்கு மேலும் எவரும் விற்கக் கூடாதென்று, மத்திய சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

(15-1-1951—இந்தியா கெஜட்—விசேஷ வெளியீடு-பாகம் II-செக்ஷன் 3-பக்கம் 23.)

பூரா சர்க்கரை—கற்கண்டு—விலை நிர்ணயம்

(1950) சர்க்கரை வெல்லக் கட்டுப்பாடு உத்தரவின்படி பூரா சர்க்கரையின் மொத்த விலையும் சில்லரை விலையும் ஜீனி விலைக்கு மேல் இருக்கக்கூடா தென்றும்; கற்கண்டின் மொத்த விலையும் சில்லரை விலையும் ஜீனி விலைக்குமேல் ஒரு மணங்கு 1க்கு ரூபாய் 5க்கு மேற்பட்டு இருக்கக் கூடாதென்றும் மத்திய சர்க்கார் விலை நிர்ணயம் செய்திருக்கின்றனர். பனங்கற்கண்டுக்கு இவ்விதி இல்லை.

(23-1-1951 - இந்தியா கெஜட்-விசேஷ வெளியீடு-பாகம்-II-செக்ஷன் 3-பக்கம் 33.)

சோடா ஆஷ் விலை நிர்ணயம்

சரக்கு சப்ளை-விலைச் சட்டத்தின்படி பல வகைப்பட்ட சோடா ஆஷ் (Soda Ash)களின் உச்ச விலை அந்தந்த இடங்களுக்குத் தகுந்தபடி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

187706

சென்னையில் ஒரு அந்தரின் கிடங்குவாயில் விலை (1) I.C.I. Heavy and light Soda Ash [Imported] என்ற ரகம் ரூ. 18-5-0. (2) Megadi Soda Ash—என்ற ரகம் ரூ. 16-5-0. (3) Tata Soda Ash - டாடா சோடா ஆஷ் என்ற ரகம் ரூ. 19-8-0. (4) Indigenous Soda Ash—Dhrangadhara—ரூ. 16-13-0. வினியோகிப்பவர்கள் (Distributors) இத்துடன் வண்டி அல்லது ரயில் சத்தத்தையும் அந்தர் 1க்கு கூலி 8க்கு மேற்படாமலும் சேர்த்துக்கொள்ளலாம். மொத்த வியாபாரிகள் வினியோகிப்பவரின் விலையுடன் அந்தர் ஒன்றுக்கு அணா 8க்கு மேற்படாமல் சேர்த்து வைத்து விற்கலாம். சில்லரை வியாபாரிகள் மொத்த வியாபாரியின் விலையுடன் அந்தர் ஒன்றுக்கு ரூ. 1-12-0க்கு மேற்படாத விலைக்குத்தான் விற்கவேண்டும்.

(15-1-1951 - இந்தியா கெஜட் - விசேஷ வெளியீடு-பாகம் II-செக்ஷன் 3-பக்கம் 25).

கந்தகம்—கையிருப்புக் கட்டுப்பாடு விதிகள் 1951

(Sulpher Stocks-Regulation Rules-1951)

கந்தக வியாபாரி, உற்பத்தியாளர், தவிர வேறு ஒருவரும் ஒரு மாத சொந்த உபயோகத்திற்கு அதிகமான அளவு கந்தகத்தை (Sulpher) கையிருப்பில் வைத்துக் கொள்ளக் கூடாது. அதிகமாக இருந்தால் அவ்விஷயத்தை புது டில்லி மத்திய சர்க்கார் காரியதரிசிக்கு (Secretary to the Government of India, Ministry of Commerce and Industry, New Delhi) தெரிவிக்க வேண்டும். அரை டன்னுக்கு மேல் ஒருவர் கையிலிருந்தால், தேவைக்கு அதிகமாகவே அவரிடம் இருப்பதாக பாவிக்கப்படும் (27-2-1951 - சென்னை-சர்க்கார் கெஜட்—பாகம் II-ரூல் சப்ளிமெண்ட்-பக்கம் 35.)

சிமெண்ட்

சொந்த உபயோகத்திற்காக சிமெண்ட் வாங்குபவர் ஒவ்வொருவருக்கும் 100 மூட்டைகள், (5 டன்) வரை, சிமெண்ட் லைசென்சு வியாபாரிகள், விற்பனை செய்யலாமென்றும், ஆனால் அவ்வியாபாரி அந்த மாதம் தருவித்த சாக்கில் 100 க்கு 7-பங்கும், முன் மாதத்தில் விற்பனையாகாமல் தங்கிய சரக்கு ஜாடாவையும் தான், இவ்விதம் பர்மிட் இல்லாதவர்களுக்கு விற்கலாமென்றும் விதிகள் தளர்த்தப் பட்டிருக்கின்றன.

(20-2-1951 - சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II—பக்கம் 259.)

விற்பனை - வரி

சாயம் போடும் வேலைகளுக்கு விற்பனை வரி விதி விலக்கு

விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 6 (1)-ல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து சென்னை சர்க்கார் கீழ்க்கண்ட விதிவிலக்கு அளித்திருக்கின்றனர். அதாவது 1-1-1948 முதல் 31-3-1950 வரை சாயம் போடும் வேலைகளுக்கு விற்பனைவரி கொடுக்கவேண்டியதில்லை என்று உத்தரவிட்டிருக்கின்றனர்.

(13-3-1951 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I-பக்கம் 417.)

ரூபாய் 100 இனும்
நரையை ஒழியுங்கள்

சாயம் மூலம் இல்லை. எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கறுப்பாகச் செய்து மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்க தலைவலியைக் குணப்படுத்தும். பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2-8-0. 3 at a time Rs. 6-8-0. அதற்கு மேற்படாதது ரூ. 3-8-0 3 at a time Rs. 9. எல்லா நரைக்கும் ரூ. 5. 3 at a time Rs. 12.

VIJOY LABORATORIES (V. M.)
P-O. MANOHARPUR (SINGHBHUM)

"வக்கீல்" பிரசுரங்கள்

1. தொழிற்சாலைச் சட்டமும் — விதிகளும் நமூனா 20-ன்படி சுருக்கம் ரூ. 0—8—0
2. ஷாப் சட்டம் ... ... ரூ. 1—8—0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்
மற்ற முக்கிய பிரசுரங்களை எதிர்பார்க்கவும்!

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)

பிழைத் திருத்தம்;- இந்த இதழ் 13-ம் பக்கத்தில் ஆரம்பிக்கும் வழக்கின் தலைப்பில் "அஸல் கிரயதார்" என்பதை "அதில் கிரயதார்" என்று திருத்தி வாசிக்கவும்.

PRINTED BY N. RAMARATNAM, M.A, B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.